Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 1 ஆம் நாள் ரவி அவ்வல் 5 (17-8-61) வியாழக்கிழமை இதழ் 158

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்-2. மதுரை

பார்லிமெண்டில்

# வரவு-செலவுத் திட்டம்

# நிறைவேறியது

## 87 பேர் சாதகம்

## 44 பேர் பாதகம்

### டாக்டர் என். எம். முக்கு 102 டிகிரி ஜுரம்

கொழும்பு, புதன்

நிதிமந்திரி பிலிக்ஸ் பண்டாரநாயக்காவின் இரண்டாவது பட்ஜட் இன்று இரவு 10 மணிக்கு பார்லிமெண்ட் சபையில் நிறைவேறியது. சாதகமாக 87 பேரும் பாதகமாக 44 பேரும் வாக்களித்தனர். மெஜாரிட்டி 43.

யு. என். பி., எம். ஈ. பி., சமசமாஜ், இக்கட்சிகளும் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், டாக்டர் டபிள்யு. டி. டி. ஸில்வா, ஆர். ஜி சேனநாயகா இவர்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

திருவாளர்கள் ஏ. துரையப்பா, மஜீத், அகமது, குலரத்ன, கம்யூனிஸ்ட்கட்சியினர் ஆகிய இவர்கள் ஆதரித்துவாக்களித்தார்கள்.

சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்களும், கே. எம். பி. ராஜ

(8-ம் பக்கம் பார்க்க)

# பெர்லின் நெருக்கடி உக்கிரமடைகிறது!

## ‘அடுத்த 12 மாதங்களில் உலகின் தலைவிதி தெரியும்’

—திரு. பவுல்ஸ்

## லோகசபையில் இந்தியப் பிரதமர் நேரு யோசனை

வாஷிங்டன், ஆக. 16

**பெர்லின் நிலைமை பற்றி அமெரிக்கா தொடர்ந்து ஆலோசனை செய்துவருகிறது. கிழக்கு பெர்லின் எல்லை மூடப்பட்டதற்கு பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். ஆனால் என்னவிதமான நடவடிக்கை என்பது தெரியவில்லை.**

மேற்கு ஜெர்மனியிலுள்ள ரஷ்யத் தூதர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்று மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் அடினேர் அவரைச் சந்தித்துப் பேசினர். மேற்கு ஜெர்மன் மந்திரி சபை இன்று கூடி நிலைமை பற்றி ஆராயவிருக்கிறது.

மேற்கு ஜெர்மன் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையின் விளைவை அது எண்ணிப் பார்க்கவேண்டும் என மாஸ்கோ வானொலி இன்று அறிவித்தது.

### செஸ்டர் பவுல்ஸ்

அடுத்த 12 மாதத்தில் உலகின் எதிர்காலத் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு. செஸ்டர் பவுல்ஸ் கூறினர். ரஷ்யாவின் சவாலை மேற்கு நாடுகள் ஏற்கத் தவறினல் எதிர்காலத்தில் நினைக்கவே முடியாத விளைவுகளும் விபரீதங்களும் ஏற்படும். இந்தச் சவாலை நாம் ஏற்று கடமையைச் செய்ய வேண்டும். எதிர்வரும் வாரங்களில் கிழக்கு மேற்கு சம்பாஷணை நடைபெறுமென எதிர்பார்க்கிறேன். யுத்தத்திற்குப் பின் இத்தனை நேரடியான அபாயம் மேற்குநாடுகளுக்கு ஏற்பட்டதே இல்லை" என்றும் திரு. செஸ்டர் பவுல்ஸ் குறிப்பிட்டார்.

### நேரு கருத்து

இன்றைய லோகசபையில் பிரதமர் நேரு வெளிநாட்டு விவகாரம் பற்றிப் பேசுகையில் மேற்கு நாடுகளை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய அபாயத்தைக் குறிப்பிட்டார். பெர்லினில் மேற்கு நாடுகளுக்குள்ள உரிமையை ரஷ்யா தெளிவாக்கிவிட்டால் படபடப்பு அடங்கிவிடுமென்று அவர் கூறினர். "கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மன் ராணுவ வெறி மீண்டும் உயிர்பெற்றுவிடும்போல் தோன்றுகிறது. மேற்கு நாடுகளின் உரிமையை திரு. குருஷ்சேவ் கூட ஒப்புக்கொண்டிருக்கிறர். ஆயினும் இதைத் தெளிவாக்கிவிட்டால் நல்லது. ஜெர்மன் ஐக்கியத்துக்கு இரு வல்லரசுகளும் போட்டி ராணுவ ஒப்பந்தங்களைக் கொண்டிருப்பதே முட்டுக்கட்டையாய் உள்ளது. அணு ஆயுத தடைபற்றி ஒரு உடன்பாட்டுக்கு இரு வல்லரசுகளும் நெருங்கி வந்தசமயத்தில் திடீரென ஏற்பட்ட சம்பவம் இந்த அம்சத்தில் பிற்போக்கை ஏற்படுத்தி விட்டது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மயிலிட்டி கிராமச் சங்கம் பட்டின சபையாக மாறும்

### ஸ்தலஸ்தாபன கமிஷன் தீர்மானம்

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டி கிராமச்சங்கத்தை பட்டின சபையாக்குவதற்கு ஸ்தலஸ்தாபனக் கமிஷன் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக இக்கிராமச்சங்கத்தின் எல்லைகளையும் வருமானத்தையும், கிராமச் சங்கத்தின் எதிர்காலத்தை எவ்வாறு சிறப்பிக்கலாம் என்பன போன்ற தகவல்களையும் தெரிவிக்கும்படி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் மயிலிட்டி கிராமச் சங்கத் தலைவரைக் கேட்டுள்ளார்.

19-ம் திகதி நடைபெறும் இக்கிராமச் சங்கக் கூட்டத்தில் இது சம்பந்தமாக விவாதிக்கப்படுமெனத் தெரிகிறது. இதுபற்றி நமது நிருபர் கிராமச் சங்க அங்கத்தவர்களைக் கண்டு விசாரித்தபோது பலரும் இத்தீர்மானத்தை வரவேற்பதாகத் தெரிவித்தார்கள்.

# ‘என்னைக் கைதுசெய்ய மந்திரி வாரண்ட் வைத்துள்ளார்!’

## பார்லிமெண்டில் பொரளை மெம்பர் புகார்

கொழும்பு, புதன்

இன்று இடைவேளைக்கு பின் சபை கூடியதும், பொரளை மெம்பர் டாக்டர் டபிள்யூ. டி. டி. ஸில்வா ஒரு முக்கியமான உரிமை பிரச்னையை எழுப்புவதாகக் கூறினர்.

"இச்சபையில் நான் கலந்து கொள்ள முடியாதபடி என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மிகக் கேவலமான சதியை நான் அம்பலப்படுத்த விரும்புகிறேன். நான் கொழும்பு நகர சபையின் மிகப் பழைய மெம்பர். தொழிலாளர் நல உரிமை விஷயங்களிலும் வெகு காலமாக ஈடுபட்டு வந்திருக்கிறேன்.

அவசரகாலச்சட்டம் இன்னும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஆனல் அதற்கான காரணம் விளக்கப்படவில்லை.

சில மந்திரிகள் தங்கள் மனைவிகளுடன் தீவை விட்டு யாத்திரை செல்கிறர்கள். தொழிலாளர் எப்படி ஆட்சேபம் செய்தாலும் இராணுவம் அவர்களை அடக்கும்.

இராணுவத்திடம் நாட்டின் ஆட்சியையும் அது சம்பந்தமான விஷயங்களையும் ஒப்ப

(8ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வில்லை

## மாணவர்களின் தேர்ச்சி பத்திரம் வைத்திராவிடில்

கொழும்பு, புதன்

**மாணவர்களின்தேர்ச்சி அறிக்கைகளை சரிவர வைத்திராத ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கக் கூடாதென்று, கல்வி டைரக்டர் தீர்மானித்திருக்கிறர்.**

பள்ளிக்கூடங்களுக்கு கல்வி அதிகாரிகள் திடீரெனச் சென்று, எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் மாணவரின் தேர்ச்சிப் பத்திரங்களை பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் டைரக்டர் கேட்டுள்ளார். மாணவர்களின் இப்பத்திரங்களை சரிவரவைத்திருப்பது ஆசிரியர்களின் பொறுப்பாகுமென்று தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப் பெற்றுள்ளது. சுமார் 60 ஆயிரம் ஆசிரியர்கள் இவ்விஷயமாக பயிற்சிபெற்றுள்ளதாயும், இப்பத்திரங்கள், மாணவர்கள் சர்வகலாசாலை, தொழில் நுட்பக்கல்லூரி இவைகளில் சேருகையில் தேவைப்படுவதாயும், தெரிய வருகிறது.

பார்லிமெண்ட்

# “புதிய வரிகளுக்கு கம்யூனிஸ்ட் கட்சி திருத்தம் கொண்டுவரும்”

—திரு. கெனமன்

கொழும்பு, புதன்

"உலக விலையிலும் பார்க்க அதிகமான விலைக்கு அமெரிக்கா மாவை இங்கு திணிக்கிறது. இலங்கை அமெரிக்காவிடமிருந்து மாவு வேண்டுவதை நிறுத்தினல், மாவு விலையை கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது" என்று கொழும்பு மத்திய தொகுதி எம். பி. திரு. பீட்டர் கெனமன் இன்று காலை பார்லிமெண்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

(8ம் பக்கம் பார்க்க)




# தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் கூட்டம்

## நிர்வாகஸ்தர்கள் தெரிவு

பதுளை செவ்.

அண்மையில் நடைபெற்ற ஊவாமாகாணத் தமிழாசிரிய சங்கத்தில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

ஆசிரிய கலாசாலை பிரவேச பரீட்சையில் சித்தியெய்திய தோட்டப்பாடசாலைப் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவோ, அன்றேல் அரசினர் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்ற நியமனஞ் செய்யவோ கல்விப் பகுதியினர் மறுத்ததை இச்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு தாய்ச் சங்க மூலம் அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

(2) சம்பளக் கமிஷன் சிபார்சின்படி பண்டாரவளை அர்ச் சூசையப்பர் பாடசாலையின் ஆசிரியர்களாகிய திரு. ச. தாமோதரம், திரு. கா. ஐயம்பிள்ளை, திரு. மா. கந்தையா, திரு.எஸ்.கே. நாகலிங்கம், திரு. வி. ஐயம்பிள்ளை, திரு. என். தருமலிங்கம், திரு.எஸ் பொன்னம்பலம் ஆகியோருக்கு 1-10-57 முதல் 3-12-60 வரையுள்ள சம்பளப் பாக்கி இதுவரை கொடுபடாமலிருப்பதால் அதைப் பெற்றுத்தரும்படி இச் சங்கம் தாய்ச்சங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறது."

ஊவா மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தத் தேர்தல் பொதுக் கூட்டம் பதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவா திரு. வி. கே. காராளசிங்கம் தலைமையில் நடைபெறறது.

அவ்வமயம் பின் வருவோர் நிர்வாகக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. வி. கே. காராளசிங்கம், உப தலைவர்கள் திரு. ஆர்.வீரகத்தி திரு.ஏ.கந்தையா காரியதரிசி திரு. அ. கிறகோரி, உப காரியதரிசி திரு. எஸ். தாமோதரம், தனதிகாரி திரு. என். தர்மலிங்கம். நிர்வாக அங்கத்தவர்கள்:

திருவாளர்கள் எஸ். எம். கந்தையா, ப. திருநாவுக்கரசு, எஸ். கே. நாகலிங்கம், வி. கே. பாலசிங்கம், எம். பரராஜசிங்கம், க சுப்பிரமணியம், எஸ். சீவரத்தினம், சு. தம்பிராசா.

# கார் விபத்தில் உதவி மந்திரி

கேகாலை, புதன்

உதவி நீதி மந்திரி திரு. அசோகா கருணரத்ன பிரயாணம் செய்துகொண்டிருந்த கார் 'லொறி' ஒன்றுடன்மோதி சேதத்திற்குள்ளானது.

திரு. கருணரத்ன உடனடியாகக் கேகாலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

## கண்டியில் பொருட்காட்சி பிரதமர் திறந்துவைப்பார்

கண்டி, புதன்

இம்மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை இங்கு நடைபெறவிருக்கும் கூட்டுறவுப் பொருட்காட்சியைப் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா திறந்து வைப்பார். இப் பொருட்காட்சி இம்மாதம் 28-ம் திகதிவரை நடைபெறும்.

முதல்தர கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாலைகள், புகையிலைச் சங்கங்கள் என்பன தமது சொந்தக் கடைகளைப் இப்பொருட்காட்சியில் திறந்து வைத்திருக்கும்.

பிரிட்டன், செக்கோஸ்லவேகியா, இஸ்ரேல் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பொருள்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பெறும்.

## ராஜன்பாபு

புதுடில்லி, ஆக. 16

ஜனாதிபதி ராஜன்பாபுவின் உடல்நலம் தெளிவாகத் திருந்தி வருவதாய் அறிவிக்கப்பட்டது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## நீதிபதியிடம் சரண்புகுந்த எம். பி.

நுவரேலியா, புதன்

அரசாங்க பிரதம கொறடாவும் கொத்மலி எம். பி.யுமான திரு. ஜே. டி. வீரசேகரா நுவரெலியா நீதிபதி திரு. பி. ஈ. டீ' சில்வாவிடம் சரண்புகுந்தார். இவர் சரண் அடைவதற்கு முன் இவரைக் கைது செய்யக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

ஏ. எம் டல்பிட்டியா என்பவரும் இன்னும் 10 பேர்களும் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் குழப்பம் செய்ததாகவும் கொள்ளை அடித்ததாகவும் திரு. வீரசேகரா எம். பி. புகார் செய்திருந்தாரென்றும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட முதல் நாளன்று முறைப்பாடு செய்தவர் கோர்ட்டில் சமுகம் அளிக்காதபடியால் நீதிபதி அவரைக் கைது செய்யக் கட்டளை பிறப்பித்ததாயும், அதன் காரணமாகவே அவர் நீதிபதியிடம் சரண் அடைந்தாரென்றும் தெரிகிறது.

## யானை மிதித்து மாண்டார்

அநுராதபுரம், புதன்

மந்திரத்தால் காட்டு யானைகளை அடக்கக்கூடியவர் எனப் பெயர் பெற்ற ஒருவர், காட்டு யானை ஒன்றினால் மிதிக்கப் பட்டு மாண்டார்.

யகவெவ என்ற இடத்தைச் சேர்ந்த அந்த மந்தரவாதி, யானை வேட்டைக்காகச் சிலருடன் காட்டுக்குள் சென்றிருந்தாராம். ஒருநாள் மாலை அவர் வேலி அமைப்பதற்காக கம்புகளை வெட்டக் காட்டுக்குள் சென்றிருந்த சமயம், அருகில் நின்ற யானை ஒன்றினால் தாக்கப்பட்டு மாண்டார். அவரின் தலையை அந்தக் காட்டு யானை சுக்கு நூறுக மிதித்திருந்ததாம்!

## அக்கரைப்பற்றுப்பகுதியில் கடும் வரட்சி

அக்கரைப்பற்று, புதன்

அக்கரைப்பற்று பகுதியில் பருவமழை தவறி கடும் வரட்சி தலைகாட்டியிருக்கிறது. இப் பகுதியிலுள்ள பெரிய குளங்களில் ஒன்றுன சாகாமத்துக் குளம் கூட வற்றி வரண்டு விட்டது. மழையை எதிர் பார்த்து சாகுபடி செய்த மானவாரி வயல் நிலங்கள் எல்லாம் பயன் அளிக்கவில்லை. இப்பகுதியிலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக இறங்கிக்கொண்டு போகிறது. வரட்சியின் காரணத்தினுல் பல தொற்று நோய்களும் தலை காட்டியிருக்கிறது.

## திருவிழாக் காலத்தில் தொண்டர்படை சேவை

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் கந்தசுவாமிகோவில் விசேஷ திருவிழாக் காலங்களில், பொதுஜனப் பாதுகாப்புக்காக நிறுவப்படவிருக்கும் தொண்டர்படையினரின் கூட்டமொன்றி அண்மையில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்குச் சங்கத் தலைவர் திரு. ஆ. அம்பலவாணர் தலைமை வகித்தார்.

சாரணர் இயக்கத் தளபதிகளில் ஒருவரான திரு. வி. சிவசுப்பிரமணியம் பேசுகையில், சாரணர் எல்லோரும், பொலிஸ் உத்தியோகஸ்தருடன் ஒத்துழைத்து பொது மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம், சங்கக் காரியதரிசி திரு. த. இராசரத்ரத்தினம், இணைக்காரியதரிசி திரு. ப. கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

## "கால் நடைகளின் உணவுக்கு ஏற்ற அரிசி"

பதுளை, புதன்

புவாக்கொடமுவ ஐக்கிய பண்டகசாலையிலிருந்த 21 மூடை அரிசியும் மனித உணவுக்கு லாயக்கற்றதென்றும் கோழிகளுக்கும் கால் நடைகளுக்குமே அதை உணவாக்கலாம் என்றும் பதுளை நீதிபதி திரு. ஜே. பி. சி. சுவாரிஸ் கண்டனம் தெரிவித்தார்.

திரு. ஏ. கே. முருகேசு என்பவர் பதுளை நகரசபைக்கு மாதிரி அரிசி கொஞ்சம் கொண்டு வந்து அவை நாய்க்குப் போடத்க்கூட உதவாது என்று முறையிட்டார். இந்த விஷயம் வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் அசோக ரத்வத்தையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் வேண்டுகோளின்படி பொது சுகாதார இன்ஸ்பெக்டர் திரு. எஸ்.சபாரத்தினம்மேற்படிபண்டகசாலைகடைக்குச் சென்று 21 மூடை அரிசியையும் கைப்பற்றி பதுளைநீதிபதிக்கும் தெரிவித்தார்அந்தவழக்கிலேயேநீதிபதி மேற்கண்டவாறு கண்டித்தார்.

# நிராகரிக்கப்பட்ட பிரஜா உரிமை மனுக்கள்

## மீண்டும் பரிசீலனை செய்யப்படும்

கொழும்பு, புதன்

**இலங்கைப் பிரஜா உரிமை கோரி மனுச் செய்து, சிறிய காரணங்களினுல் நிராகரிக்கப்பட்ட ஏராளமான பிரஜா உரிமை மனுக்கள் மீண்டும் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றன.**

விசாரணைத் தேதிகளில் ஆஜராகத் தவறிய விண்ணப்பதாரர்கள், அல்லது ஆஜராகும்படி கோரிய கடிதங்கள் கிடைக்காதவர்கள் ஆகியோரின் மனுக்களே இவ்விதம் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றன.

விண்ணப்பதாரர்களின் முறையீடுகளைத் தொடர்ந்து, பாதுகாப்பு வெளிநாட்டு மந்திரி காரியாலயம் விடுத்த உத்தரவின்பேரில், இந்திய - பாகிஸ்தானியர் பிரஜா உரிமைக் கமிஷனர் இலாக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

## ஹன்வலையில் பணிஸ் பஞ்சம்

ஹன்வலை, செவ்வாய்

ஹன்வலையில் பணிஸுக்குப் பெரிய பஞ்சம் ஏற்பட்டுள்ளது. சனிக்கிழமை தொடக்கம் இங்கு மருந்திற்குக்கூடப் பணிஸ் வாங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது.

அரசாங்கம் விதித்துள்ள நியதிகளுக்கேற்ப தாம் 'பணிஸ்' செய்ய முடியாதிருக்கிறது என்று பணிஸ்' தயாரிப்பவர்கள் கூறுகிறுர்கள்.

ஐந்து அவுன்ஸ் நிறையுள்ள பணிஸ் ஒன்று பன்னிரண்டு சதத்திற்கு விற்கப்படல் வேண்டும் என்று அரசாங்கம் சட்டம் விதித்துள்ளது. ஆனல் இந்த அளவின்படி ஒரு ருத்தல் மாவில் இரண்டரை பணிஸை மட்டும்தான் தாம் செய்யலாம் என்று பணிஸ் தயாரிப்பவர்கள் கூறுகிறுர்கள். ஹோட்டல்களுக்கு பணிஸ் ஒன்று பத்துச் சதமாக விற்பதனுல் தமக்கு ஒரு லாபமும் கிடைக்காது என இவர்கள் அபிப்பிராயப்படுகின்னர்.

## 'மாணவர் பயனுள்ளவர்களாக வாழவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

"இன்றைய மாணவர் சமுதாயந்தான் நமது வருங்காலச் சந்ததியினர். ஆகையால் அவர்கள் நல்லறிவு பெற்று தமக்கும் பிறருக்கும் பயனுள்ளவர்களாய்த் திகழவேண்டியது அவசியமாகும்." இவ்வாறு வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற மாணவர் சங்கக் கூட்டத்தில் பேசிய ஆசிரியர் திரு. சி. சீவரத்தினம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்துக்கு செல்வன் சோ. முத்துராசா தலைமை வகித்தார். தலைமையாசிரியர் வித்துவான் இ. திருநாவுக்கரசு, திரு. க. வை. ஆத்மநாத சர்மா ஆகியோரும் பேசினர்.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்




பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்றீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3

"எங்கள் பகுதிக்கு வர்த்தகத் தடைவிதித்தால்

# மேற்குபெர்லினுக்குள் வர்த்தகம்தடுக்கப்படும்"

## கிழக்கு ஜெர்மனி விடுத்துள்ள எச்சரிக்கை

### அமெரிக்காவுக்குஏற்பட்டுள்ளமிகப்பெரும்சவால்

பொன், ஆக. 16

"கிழக்குப்பிராந்திய நாடுகளுடன், மேற்கு ஜெர்மனி வர்த்தகத் தடை விதிக்குமானல், மேற்கு பெர்லினுக்குள் அந்நாடு வர்த்தகம் நடத்துவது தடைசெய்யப்படும்" என கிழக்கு ஜெர்மனி நேற்று எச்சரிக்கை விடுத்தது.

இதற்கிடையில் பெர்லினில் போடப்பட்ட எல்லைத்தடை பற்றி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் 3 தளபதிகளும் கிழக்கு ஜெர்மனியின் ரஷ்யத் தளபதியிடம் முறைப்படி ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். இது பெர்லின் பற்றிய உடன்பாட்டை மீறிய செயல் என அவர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு ஜெர்மனி எடுத்துக்கொண்ட பல துரிதநடவடிக்கைகளில், பிரதான பாதையான "பிராண்டன்பர்க்" வாசலை அடைத்ததும் ஒன்றாகும்.

யுத்தத்தற்குப் பின் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அபாயகரமான சவால் என பெர்லின் எல்லை அடைப்பை அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

வார்சா நாடுகள் பெர்லின் பற்றி மேற்கொண்டுள்ள நடவடிக்கையைத் தாம் ஆதரிப்பதாக சீன அறிவித்துள்ளது.

வருகிற வெள்ளிக்கிழமை அரசாங்கத்தின் முடிவைக் கேட்பதற்காக மேற்கு ஜெர்மன் பார்லிமெண்டின் விசேஷ கூட்டம் நடைபெறுகிறது.

## மடுமாதா திருநாளில் மக்கள்கூட்டம்

மன்னர், புதன்

சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் மருதமடுத் திருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். பல்வேறு சமயத்தினரும் மாதாவின் அருளை வேண்டி நின்றனர். கண்டி மேற்றிராணியார் டாக்டர் லீயோ நாணயக்காரா ஓ. எஸ். பீ. என்பவர் பாடற் பூசை வைத்தார்.

ஜனசமுத்திரத்தோடு சுற்றுப்பிரகாரத்தை வழமைபோல நடத்துவது சங்கடமான நிலைமையை ஏற்படுத்துவதனல் அவர்களை நின்ற இடத்திலேயே நிற்கும்படி செய்து ஆரோகண மடுத்தாயார். குருமார், கன்னியாஸ்திரிகள், சாரணர் புடைசூழ கோயில் முன்றிலை வலம்வந்து ஆசீர்வதித்தனர். சந்தோஷ அருளைப் பொழியும் மாதாவை வாயரவும் மனதாரவும் போற்றிப்புகழ்ந்தனர்.

## தெதுரு ஓயா யானைகள்

கொழும்பு, புதன்

தெதுரு ஓயாவில் யானை விரட்டும் இயக்கம் அடுத்த மாதம் 15-ம் தேதி ஆரம்பமாகும். சிலாபம், முன்னீஸ்வரம் கோயிலில் ஆரம்பமாகும் ஒரு வைபவத்தைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு நடைபெறும். இதற்கு 20,000 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

---

## சுதந்திர தினம்

புதுடில்லி, ஆக. 16

இந்தியாவின் 14-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ராஷ்டிரபதி பவனத்தில், உப-ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று அளித்த உத்தியோக ரீதியான விருந்தில் 2000 பேர் கலந்து கொண்டனர். உலகெங்குமிருந்து பல மன்னர்களும், ஜனதிபதிகளும், பிரதமர்களும் ராஷ்டிரபதிக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பினர்கள். எல்லா ராஜ்யங்களிலும் சுதந்திர தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

---

## தபால் ஊழியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

"மனித அடிப்படை உரிமையையே இந்த அரசாங்கம் பறித்துக் கொண்டிருக்கிறது. முன்னைய அரசாங்கங்களிடமிருந்து சில உரிமைகளை நாம் பெற்றிருந்தோம். பெற்றுக் கொண்ட உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு தபால் ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளையில் 11வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய அகில இலங்கை தபால் ஊழியர் சங்கத்தலைவர் திரு. வில்லிய சிங்கோ கூறினர். இக் கூட்டத்துக்கு திரு. எஸ். பத்மநாதன் தலைமைவகித்தார்.

திரு. சிங்கோ மேலும் பேசும்போது வாழ்க்கைச் செலவு ஏறிக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் நாம் சம்பளம் கூட்டிக்கேட்கும் சமயத்திலும் அபிவிருத்திக்கென்று சம்பளவெட்டுப்போடுகிறர்கள்.

நுவரேலியாக் கிளைச் சங்கக் காரியதரிசி திரு. எஸ். சிறிசேன பேசியதாவது:

தொழிற்சங்கங்களுக்கிடையே ஒற்றுமையில்லாவிடில் நமது உரிமைகளைப் பெறமுடியாத நிர்ப்பந்தம் ஏற்படும். மொழிப் பிரச்சினையைத் தொழிற் சங்கங்களுக்குள் புகுத்தி அவ்வியக்கத்தையே தகர்த்தெறியும் நோக்குடனேயே இப் பிரச்சினையைச் சிலர் கிளப்பியிருக்கிறர்கள்.

திரு. கே. செல்லையாவும் மற்றும் சிலரும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவின்போது திரு. என். தளையசிங்கம் தலைவராகவும, ஆர். மகாலிங்கம் காரியதரிசியாகவும், திரு. வி. கந்தையா தனதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## கல்லோயா ஊழியர்களுக்கு சிங்களப்பரீட்சை

அக்கரைப்பற்று, புதன்

கல்லோயா அபிவிருத்திச்சபையின் ஊழியர்களுக்கான சிங்கள தேர்ச்சிப்பரீட்சை இவ் வருடம் செப்டம்பர் — அக்டோபரில் நடைபெறலாம். அதன் பின் 1962 முதல் இப்பரீட்சை நான்கு தரங்களில் நடாத்தப்படுமெனத் தெரியவருகிறது.

## இந்தியாவின் கோவா கொள்கை மாறுமா?

### உள்நாட்டு உதவி மந்திரி பிரஸ்தாபம்

புதுடில்லி, ஆக. 16

"பாரதத்திலுள்ள கோவா போன்ற போர்த்துக்கல் பகுதிகளில் அரசியல் கைதிகளைக் கொலை செய்யும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமானல், இந்தியாவின் கோவா கொள்கை மாறும்" என உதவி உள்நாட்டு மந்திரி ஸ்ரீமதி வயலட் ஆல்வா குறிப்பிட்டார்.

கோவா சிறையில் சமீபத்தில் தேசியவாதிகள் இறந்தது பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர். "இவ்விதச் செயல் அதிர்ச்சியளிப்பதாகும். அங்கோலாவில் மக்களை அடக்கிவிட்டதாய் போர்த்துக்கல் மனப்பால் குடிக்கலாம். அதே முறையில் கோவாவிலும் செயலாற்றலாம் என அந்நாடு நினைத்தால் அது தவறு. அங்கோலாவில் நடைபெறும் முறைகளை இங்கு நடகக விடமாட்டோம். அவ்விதம் நடைபெறுமானல் போர்த்துக்கல்லுடன் வேறு வழிகளை உபயோகித்து நடவடிக்கை எடுப்போம்" என்றார் உதவி மந்திரி.

## விசர்நாய் கடித்த சிறுவனின் பரிதாப மரணம்

காத்தான்குடி, புதன்

விசர்நாய் கடித்ததின் காரணமாக கல்லடி உப்போடையைச் சேர்ந்த செல்வன் சுப்பிரமணியம் பரிதாப மரணத்துக்குள்ளானர். இச் சிறுவனுக்கு வயது நான்கு. டாக்டர்கள் பலர் பெரு முயற்சி எடுத்தும் பயனளிக்காது போகவே, பிரஸ்தாப சிறுவன் ஆகாரமோ, நீரோ அருந்தமுடியாத நிலையில் பரிதாப மரணமடைந்தார்.

## பிரேத அடக்கத்திற்கு முன் இறந்த பெண்ணை மணந்தார் காதலர்

ஈப்போ, ஆக 3

இரண்டு இளம் காதலர்களின் திருமணத்தைச் சாவினலுங்கூடத் தடைசெய்ய இயலவில்லை.

வரும் டிசம்பரில் மணஞ்செய்துகொள்ளத் திட்டமிட்டிருந்த திரு. சார்லி இங் சங், குமாரி ரோவங் யோக்சிங் ஆகிய இருவரும் 'பிரயாணம் செய்த ஒரு கார் கடந்த வெள்ளிக்கிழமையன்று தம்புன் ரோட்டில் கவிழ்ந்ததால் குமாரி வோங் கொல்லப்பட்டார்.

ஈமக்கிரியைகள் நடைபெறுவதற்கு முன்னர் சீன முறைப்படி துக்கத்தைக் குறிக்கும் உடைகள் அணிந்து காலஞ்சென்ற குமாரிவோங்கை திரு. சார்லி இத் திருமணஞ் செய்து கொண்டார். இந்தத் திருமணத்தை ஒரு பௌத்த பிக்கு நடத்திவைத்தார்.

மணம் நடந்ததின் அறிகுறியாக ஒரு சீப்பால் இறந்து போன பெண்ணின் தலையில் மூன்றுமுறை அந்தப் பிக்கு சீவினர். சாவு அவர்களைப் பிரித்துவிட்டதன் அறிகுறியாக அந்தச் சீப்பை அவர் இரண்டாக ஒடித்தார்.

ஒரு துண்டைப் பெண்ணின் சவப்பெட்டிக்குள் போட்டுவிட்டு மற்றொரு பகுதியை வீசியெறிந்தார் அவர்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு காதலர்களாக இவர்கள்கடந்த 1956-ல் ஈப்போவில் நடைபெற்ற "ராக்-என்ரோல்" போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றனர்.

மலாயா முழுவதற்கும் நடைபெற்ற 1957-ம் ஆண்டு ராக்-என்-ரோல் போட்டியில் முதலாவதாகவும், 'சா-சா' போட்டியில் இரண்டாவதாகவும் இவர்கள் வெற்றிபெற்றனர்.

## முதலாளிகளை எதிர்க்க நிதி மந்திரி தயங்குவது ஏன்?

### செனட்டர் டி' சூஸா பேச்சு

பதுளை, செவ்வாய்

"தகப்பனும் மகனும் நாட்டை ஆள்வதற்கு வாய்ப்பளித்தீர்கள். கணவனும் மனைவியும் ஆள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். சிறந்த அறிவாளிகளைக் கொண்ட லங்கா சமசமாஜக் கட்சி நாட்டை ஆள்வதற்கு ஒரு முறையாவது வாய்ப்பளித்தால் என்ன?" என்று செனட்டர் திரு. டொரிக் டி' சூஸா சேனநாயக்கா பூங்காவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சாதாரண உழைப்பாளரும் கிராம வாசிகளும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இன்று வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டதால், தங்கள் பெரிய குடும்பங்களைப் பராமரிக்க மிகவும் கஷ்டப்படுகிறர்கள்.

"அரசாங்கம் சோஷலிஸ பாதையில் செயலாற்றத் தீர்மானித்தால், பெரிய முதலாளிகளை எதிர்க்கவேண்டும். ஏழைகள் மேல் வரியைப் போடாமல் தோட்டங்களையும், வெளிநாட்டு வங்கிகளையும் அரசாங்கம் எடுக்கவேண்டும்.

சமசமாஜக் கட்சியின் உதவியுடன்தான் எஸ். எல். எப். பி. அதிகாரத்துக்கு வந்தது! சமசமாஜக் கட்சி தொடர்ந்து வேலை நிறுத்தங்களை ஏற்படுத்தி அரசாங்கத்தை வேலை செய்ய விடவில்லை என்றர்கள். இப்பொழுது வேலை நிறுத்தங்கள் கிடையாது. அரசாங்கம் ஏன்செயலில் இறங்கக்கூடாது?

"அரசாங்கம் ஏழைகளையும் முதலாளிகளையும் பாதுகாக்க விரும்புகிறது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் முதலாளிகளின் உதவிக்கு வரலாம் என்ற பயத்தால், நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முதலாளிகளை எதிர்க்கத் தயங்குகிறர்."

## 'தாக்கப்படுகிற நாட்டுக்கு உதவி செய்வோம்'

### இந்தியா-பாகிஸ்தான் பற்றி அமெரிக்க மந்திரி

வாஷிங்டன், ஆக. 16

"பாகிஸ்தான் இந்தியாவை தாக்கினலோ, அல்லது இந்தியா பாகிஸ்தானைத் தாக்கினலோ அவ்விதம் தாக்கப்படுற நாட்டின் உதவிக்கு அமெரிக்கா வரும்" என அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு, செஸ்டர்பவுல்ஸ் கூறினர். இது புதிய உத்தரவாதம் அல்லவென்றும், 1954-ம் ஆண்டு ஜனதிபதி ஐஸன்ஹோவர், பிரதமர் நேருவுக்கு எழுதியுள்ள கடிதத்தைத்தான் தாம் திரும்பச் சொல்வதாயும் அவர் கூறினர்.

---

## வல்லரசுகள் தகராறு பற்றி பர்மிய பிரதமர்

ரங்கூன், ஆக. 16

வல்லரசுகளுக்கிடையே போர் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சியில் பெல்கிரேடில் ஆரம்பமாகும் நடுநிலைமை மண்டல அதிபர்கள் மகாநாடு ஈடுபடமுடியும் என பர்மியப் பிரதமர் யூநு கூறினர்.

திரு. யூநு பார்லிமெண்டில் பேசினர். அங்கோலாவில் போர்த்துக்கல் நடத்திவரும் அட்டுழியங்களையும் அவர் கண்டனம் செய்தார். நடுநிலைமை அதிபர்கள் மகாநாட்டுக்காக யூகோஸ்லேவியா செல்லும் வழியில், வருகிற 26-ம் திகதி அவர் புதுடில்லி வருவார்.

## இலங்கையின் வெளிநாட்டு தூதர்கள்

மாஸ்கோ, ஆக. 16

ரஷ்யாவில் இலங்கையின் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. டி. பி. சுபசிங்க, தன் நியமனப் பத்திரங்களை இன்று ரஷ்யத் தலைவரிடம் சமர்ப்பித்தார்.

* * *

ஐ. நா. வில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் ஜி. பி. மலலசேகரா, தனது நியமனப்பத்திரங்களை பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷில்டிடம் சமர்ப்பித்தார்.

* * *

ஐக்கிய அராபியக்குடியரசில் இலங்கைத் தூதராய் இருந்த திரு. எம். எம். மஹ்ரூப், யூகோஸ்லேவில் இலங்கையின் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறர்.

---

## எண்ணை உற்பத்தி ஆரம்பித்தது

புதுடில்லி, ஆக. 16

அங்கலேஸ்வரிலும், காம்பேயிலும் குறிக்கப்பட்ட காலத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பே எண்ணை உற்பத்தி ஆரம்பமாகிவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது. அங்கலேஸ்வரில் ஜனவரி மாதம் முதல் தினசரி 1500 டன் எண்ணை எடுக்கப்படும்.

**மணிவாக்கு**

"பதவியில் உள்ளவர்கள் எவரிடமும் பாரபட்சம் காட்டாமல் சுயநலத்தை மறந்து பொது நலத்துக்காக உழைக்க வேண்டும்."

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ 1உ (17 8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சங்கக் கடைகள்

மக்களுக்கு நியாயமான விலைக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்வதில் அரசாங்கத்துடன் கூடுமானவரை ஒத்துழைப்பதாக வர்த்தகப் பிரதிநிதிகள் உறுதிகூறியிருக்கின்றார்கள். வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும், சுத்தமான உணவுப் பொருள்கள், நியாயமான விலைக்குத் தாராளமாக மக்களுக்குக் கிடைக்கச் செய்யவும் வழிவகைகள் செய்ய, அரசாங்கம், வர்த்தக ஸ்தாபனங்கள் இவர்களது பிரதிநிதிகளடங்கிய கமிட்டிகளும் நியமிக்கப் பட்டுள்ளன. இவையெல்லாம் வரவேற்கத்தக்கனவே.

ஆனல் இக்கமிட்டிகள் மேற்குறித்த நோக்கத்தை எவ்வளவுதூரம் நிறைவேற்றி வைக்குமென்பது இனித்தான் தெரியவேண்டும். இதற்கிடையே பல இடங்களிலும் சிறப்பாக கிராமங்களிலும் பல உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை என்றும், சில இடங்களில் மிக அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் புகார்கள் கிடைத்துவருகின்றன. கொள்ளை லாபக் குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருப்பினும், ஆக்க முறைகளில் தக்க ஏற்பாடுகளைச் செய்தாலே, பொது மக்களின் சங்கடங்கள் ஓரளவு குறையக் கூடும்.

சென்ற 1942 ம் வருடத்தில் ஜப்பான் யுத்தம் ஆரம்பமான போதும், நாட்டில் இதேமாதிரி நிலைமை ஏற்பட்டிருந்தது. உணவுப் பஞ்சம் ஏற்பட்டு பலர் பட்டினியால் சாகக்கூடிய நிலைமை வங்காளத்தைப்போல் இங்கும் ஏற்படுமோ என்று அஞ்சக் கூடிய நிலை இருந்தது. நல்ல வேளையாக அச்சமயம், நாடெங்கும் பல்லாயிரக்கணக்கான சங்கக் கடைகளை ஆரம்பித்து, அவை மூலம் மக்களுக்கு அரிசி உள்ளிட்டு அத்தியாவசிய உணவுப் பொருள்களைச் சீராகவும், நியாயமான விலைக்கும் கிடைக்கும்படி செய்தனர். இதனல் இங்கு பசிப் பிணிக்கு யாரும் பலியாகாமல் தவிர்க்க முடிந்தது.

இப்போதும் அச்கூட்டுறவுச் சங்கங்களில் பலவும் இருப்பினும், அவை தங்கள் கடமையைப் பொதுமக்களுக்கு அவ்வளவாகச் செய்யவில்லை. பல சங்கக் கடைகள் மூலம் ரேஷன் அரிசிமட்டுமே விநியோகிக்கப் பட்டுவருகின்றது. அந்த அரிசியும் மனிதர் உண்ணத் தகுதியற்ற பாடாவதியாக இருப்பதாகவும் புகார்கள் கிடைக்கின்றன. ஒரு சில சங்கக் கடைகளைத் தவிர மற்றவையெல்லாம், எந்த நோக்கத்துடன் அவை ஆரம்பிக்கப்பெற்றனவோ அந்நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாக இல்லை. சில சங்கக் கடை நிர்வாகிகள் கொள்ளை லாபம் அடிப்பதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப் படுமென்று உணவு மந்திரி எச்சரித்திருப்பதிலிருந்தே, அங்கும் ஊழல் இருப்பது அம்பலமாகிறது.

சங்கக் கடைகளில் ஊழல்கள் தலை தூக்காமல் செய்வதுடன், அவற்றின் மூலம் எல்லா அத்தியாவசியப் பொருள்களும், நியாயமான விலைக்கு சீராக, தாராளமாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இப்போதேற்பட்டுள்ள சங்கடமான நிலையில் மக்களுக்குச் சங்கக் கடைகள் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும். ஆங்காங்கேயுள்ள மக்களும் சிறப்பாக குடும்பப் பெண்களுமடங்கிய சபைகளை அமைத்து, சங்கக் கடைகள்மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சீராக மக்களுக்குக் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளச் செய்தால், பொதுமக்களின் வாழ்க்கைச் செலவுகள் குறைய வழி பிறக்கும். சங்கக் கடைகளைப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டிய சமயம் இது.

## தற்கொலை முயற்சி

நேற்று பத்திரிகையில் தற்கொலை முயற்சிகளைப் பற்றி இரு செய்திகள் வெளியாகியுள்ளன. குடிப்பழக்கமுள்ள தன் புருஷனின் இம்சை காரணமாக ஒருதாய் தன் குழந்தையைக்கொன்று தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்று, காப்பாற்றப் பட்டார். கொலைவழக்கு நடந்தது. தாயான எதிரியின் பரிதாபக் கதையைக் கேட்டு, தாயை இருவருட கண்காணிப்பில் விடுதலை செய்தார் நீதியரசர். மற்றொரு சிங்களவர், ஏழு குழந்தைகளின் தந்தை, உடல் நிலை சரியின்றி, வேலையின்றி ஏழ்மைகாரணமாகத்தற்கொலை செய்துகொள்ள முயன்றிருக்கிருர். கயிற்றில் தொங்குகையில் நல்ல வேளையாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். வாழ்க்கைப் பிரச்சினைகள் பலப்பல. அவற்றைச் சமாளிக்க வகையின்றி, மனமுடைந்து, வாழ்க்கைக்கே முடிவுகட்டப் பலர் முயற்சிக்கின்றனர். இவ்வித நிலைமையில் ஆறுதல் கூறி உதவி செய்ய யாருமில்லாதது பெரிய குறை. சமய, சமூக ஸ்தாபனங்களும் குருமார்களும் இக்குறையை நீக்கி மேலான சமூகப் பணி செய்ய எவ்வளவோ இடமுண்டு. இப் புண்ணிய பணியைச் செய்து, ஆறுதலற்றவர்களுக்கு உதவி அளித்துக் காக்க, ஒருசில சமூக, சமய ஸ்தாபனங்களாவது முன்வந்தால் பல உயிர்களும், குடும்பங்களும் காப்பாற்றப்படுவர்.

**உலக மேடை**

# இந்தியா - பாக். சுதந்திரம்

## காஷ்மீர் - தாராசிங் உண்ணாவிரதம்

## பெர்லின் நெருக்கடி - 3-வது ஐந்தாண்டுத்திட்டம்

— டி. எம். எம —

இவ்வாரம் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் 14வது சுதந்திர தினத்தைக் கொண்டாடின. கடந்த சில வருடங்களில் இரு நாடுகளிலும் சாதிக்கப் பட்ட விஷயங்கள் அப்போது வெளியிடப்பட்டன. கடந்த 14 வருடங்களாகவே இரு நாடுகளுக்குமிடையே நிலவி வரும் கெடுபிடிப் போர் இச்சமயத்தில் நினைவில் கொள்ளத்தக்கது.

இரு நாடுகளின் உறவிலும் இப்போது முக்கிய முட்டுக்கட்டையாக விளங்குவது காஷ்மீர் ராச்சியம். ஜனதிபதி அயூப்கான் பதவிக்கு வருமுன் இரு நாடுகளுக்குமிடையே இருந்த பல சிக்கல்கள் அவரது வருகைக்குப்பின் தீர்த்து விடப்பட்டது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். கால்வாய்த் தண்ணீர்த் தகராறு. அகதிகளின் சொத்துப் பிரச்சினை போன்ற முக்கிய விஷயங்கள் இரு நாடுகளுக்கிடையே இப்போது தீர்க்கப்பட்டுவிட்டன. எனவே, இப்போது எஞ்சியிருப்பது காஷ்மீர் மட்டுமே. சட்டரீதியாக காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட்டதென்பதும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதென்பதும் இந்தியாவின் கட்சி. இந்தியா சுதந்திரமடைந்த போது தங்கள் ராச்சியங்களை எந்தப் பகுதியுடன் சேர்ப்பது என்னும் விஷயத்தை முடிவு செய்யும் அதிகாரம் சமஸ்தானதிபதிகளுக்கு இருந்தது. இந்த அதிகாரத்தை உபயோகித்து காஷ்மீர் மன்னர் இந்தியாவுடன் அந்நாட்டை இணைத்துக்கொண்டார். காஷ்மீரில் பொது ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று ஐ. நா. கூறிய சிபார்சுகளை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன. ஆனல் வாக்கெடுப்புக்கேற்ற சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதில் இரு நாடுகளுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சட்டபூர்வமாக காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்து விட்டதால் அந்த ராச்சியத்தின் பாதுகாப்பு தமக்குச் சேர்ந்தது என்றும், எனவே வாக்கெடுப்பு சமயத்தில் இந்தியத் துருப்புக்கள் அங்கிருக்குமென்றும், வாக்கெடுப்பில் காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர முடிவுசெய்தால் இந்தியா தன் துருப்புக்களையும் ஆதிக்கத்தையும் வாபஸ்பெறுமென்றும், ஆனல் ஆக்கிரமிப்பை நடத்தியுள்ள பாகிஸ்தான் துருப்புக்கள் வாக்கெடுப்புக்கு முன் வாபஸ் ஆகவேண்டுமென்றும் இந்தியா கோரியது. ஆனல் பாகிஸ்தான் இதற்கு இணங்கவில்லை. தங்கள் துருப்புக்களும் அங்கிருக்க வேண்டுமென்பது அதன் வற்புறுத்தலாகும். ஆனல் பிறகு ஏற்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து, காலவரையறையின்றி தாம் காத்திருக்கமுடியாதென்றும், சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை என்றும் இந்தியா அறிவித்துவிட்டது. இந்த நிலையில் இப்போது காஷ்மீர் பிரச்சினை இருக்கிறது. இருநாடுகளுக்குமிடையே காஷ்மீர் சம்பந்தமாக யுத்தம் ஏற்படும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் சர்வதேச ரீதியிலும், மனேதத்துவ ரீதியிலும் இப்போது குறைந்துள்ளன. காலம்தான் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்போல் தெரிகிறது.

⁂ ⁂ ⁂

இதற்கிடையில் சுதந்திர தினத்தன்று இந்தியாவின் மகிழ்ச்சிக்கிடையே கவலைதரும் ஒரு விஷயமும் தோன்றியிருக்கிறது. அகாலி சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங் பஞ்சாப் ராச்சியம் கோரி சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதே அந்த விஷயம். மொழி வாரி ராச்சியப் பிரிவினை இனி கிடையாது என நேருஜி திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். இந்த உறுதியை தாராசிங் உண்ணாவிரதத்தின் எதிர் விளைவுகளைக் கொண்டே பார்க்க வேண்டும்.

### கென்யாட்டா விடுதலை

இவ்வாரம் நடைபெற்ற சர்வதேச முக்கியத்துவம் பெற்ற சம்பவம் ஆபிரிக்காவின் தேசியத்தலைவர்களில் ஒருவரான ஜோமோ கென்யாட்டா விடுதலை செய்யப்பப்பட்டதாகும். கென்யாட்டா ஆபிரிக்க எழுச்சியின் மகத்தான தலைவர்களில் ஒருவர். கென்யாவின் சிம்மம் என அவரைக் கூறலாம். டாக்டர் நிக்ருமா, டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா போன்றவர்களைவிட அவர் புகழ்பெற்ற தலைவராகும். கென்யா இன்றேல் கென்யாட்டா இல்லை; கென்யாட்டா இன்றேல் கென்யா இல்லை என்னும் அளவுக்கு அவரது செல்வாக்கு விளங்குகிறது. 7 வருட சிறை வாசத்துக்குப் பின், மற்ருேராண்டு தடுப்புக்காவலுக்குப்பின் விடுதலையான கென்யாட்டாவுக்கு ஆபிரிக்க மக்கள் அஞ்சலி செலுத்துகிருர்கள். அவரது விடுதலையை உலகமே வரவேற்கிறது. பிரிட்டன் கடைசிக் கட்டத்திலாவது இந்த முடிவைச் செயததையிட்டு அதற்கு நன்றி செலுத்த வேண்டும்.

### பெர்லின் நெருக்கடி

கடந்த ஒரு வாரத்துக்கிடையில் பெர்லினில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் கவலையை அளித்துள்ளன. கிழக்கு ஜெர்மனி மேற்கு பெர்லினுடன் உள்ள தன் எல்லையை அடைத்துவிட்டதைத் தொடர்ந்து இந்த நெருக்கடி உருவாகியிருக்கிறது. ஜெர்மன் உடன்படிக்கைக்கு மாறுன செயல் என மேற்கு நாடுகள் இதை ஆட்சேபிக்கின்றன. ஜெர்மனியில் ரஷ்ய ராணுவத்துடன் பொருதக் கூடிய அளவு பலம் மேற்கு நாடுகளுக்கு இல்லை எனக் கருதப்படுகிறது.

தாக்குதல் நடந்தால் மின்சார வேகத்தில் பிரவேசிக்கும் நிலையில் ரஷ்ய ராணுவ பூதம் பிரமாண்டமாக வளர்ந்துவிட்டிருக்கிறதென்றும் கருதப்படுகிறது.

ரஷ்ய ராணுவத்தைத் தடுப்பதற்கு மேற்கு நாடுகளுக்குள்ள ஒரே வழி ராக்கெட்டுகளையும், அணு ஆயுதங்களையும் பிரயோகிப்பதுதானும். அதாவது ஜெர்மனி சம்பந்தமாக யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் முதலில் அணுஆயுதங்களை மேற்கு நாடுகள்தான் உபயோகிக்க வேண்டியிருக்கும். இதன் முடிவு தெரிந்ததே. பின் ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்க, உலக யுத்தம் வெடித்துவிடுமல்லவா! உலகத்தின் சமா

(5ம் பக்கம் பார்க்க)

**ஆசிரியருக்குக் கடிதங்கள்**

# ஈழத்துச் சைவசித்தாந்த திருப்பணிக் கழகம்

சென்ற ஆண்டில் தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இந்த நாட்டிற்கு வந்திருந்த போது சைவ சித்தாந்தத் திருப்பணிக்கழகத்தை நிறுவி வைத்தார்கள். கிறீத்துவம் போன்ற அயல் மதங்கள் எவ்வாறு உலகிடைப் பரந்து விரிந்து மன்பதையின் துன்பம் துடைக்கும் நெறியில் ஈடுபட்டு ஒளிர்கின்றனவோ, அவ்வாறு நமது சித்தாந்தத் திருநெறியும் காலநிலைக்கேற்ப உலகவர் துன்பந்துடைக்கும் வழிகளிற் பணியாற்ற வேண்டும் என்பது அடிகளார் பெருங்கனு. தனிமனிதன் உள்ளத்தில் ஞானப்பயிர் வளர்க்கும் கைங்கரியத்தோடு மட்டும் நின்றுவிடாமல் அன்புருவச் சமுதாயத்தைப் படைக்கும் முயற்சியிலும் சித்தாந்தச் செந்நெறி ஈடுபட்டு உழைத்தல் வேண்டும் என்பதே அடிகளாரின் ஆசை. இந்த ஆசைக்கனவுகள் நிறைவேறுதற்குரிய திட்டமும் வகுத்தருளித் தந்திருக்கின்ருர்கள். நூற்றுக்கணக்கான முழுநேர ஊழியர்களும், ஆயிரக்கணக்கான பகுதி நேர ஊழியர்களும் திரண்டு ஒரு அருள் நெறித்திருக்கூட்டம் இத்திருப்பணிக்கழகச் சார்பில் அமைக்கப்பெற்றுத் தீவிரமான ஒரு சைவ மறுமலர்ச்சி இயக்கம் தென்தமிழ் நாட்டிலும், ஈழத்தமிழ் நாட்டிலும் மிக விரைவில் உருவாகவேண்டும் என்று அடிகளாரின் அருள் உள்ளம் விழைந்தது. அண்மையில் திருச்சியில் கூடிய அருள் நெறித்திருக்கூட்ட மாநாட்டில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்த பிரதிநிதிகளின் ஆதரவோடு அடிகளாரின் பேரிலட்சியமாகிய அகில

(5ம் பக்கம்பார்க்க)

**ஐயாறன் எழுதுவது**

"பகல் ஒன்றரை மணிக்கு கொடியேறப் போகிறது. தரிசனத்துக்கு வா" என்று நல்லூர் முருகன் முன்கூட்டியே காரையும் அனுப்பினன். ஆபீஸ் வேலை அதிகமிருப்பதால், அந்த டயத்துக்கு வருவதாகச் சொல்லிவிட்டு, பின்னர் சென்றேன்.

* * *

1-35 ஆகிவிட்டது. நல்லூரில் எல்லாம் விநாடிக் கணக்கு. டாண் டாண் என்று முடிந்துவிடுமல்லவா! ஒருவித மனக் குறையுடன் வீதிவலம் வந்தேன். பல பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், அடியழித்தும் சென்ருர்கள். முருகன் கட்டளையால், மேகராஜன் குடை பிடித்தான். வெயில் இல்லை.

கோயில் வெளி மண்டபத்திலும் நல்லகூட்டம். ஒருவிதமாக உள்ளே சென்றேன். கொடியேறிவிட்டதென்ருலும், முருகன் எனக்குக் காட்சியளிக்க மயில்மீது காத்துக் கொண்டிருந்தான். கிட்ட நெருங்கமுடியவில்லை. பக்தர்கள் கூட்டம் அவ்வளவு. ஆனலும் பரவியிருந்த அருட் கடலில் ஆனந்தமாக மூழ்கினேன். முருகன் புன்முறுவல் பூத்தான்.

* * *

"முருகா! இலங்கையுள்ளிட்டு உலகெல்லாம் உண்மையில் உன் ஆட்சிதான் நடக்கிறது. இதை மறப்பதால் தான் கவலை. கலக்கம். எல்லாம் எப்போதோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்புமில்லை." என்று என்னையுமறியாமல் வாய் முணுமுணுத்தது. "ஒன்றுக்கும் பயப்படாதே" என்று முருகன் அபயகரம் காட்டி 'சும்மா இரு' என்ருன். நானும் உள்ளம் குளிர்ந்து விடைபெற்றுத் திரும்பினேன்.

* * *

கீரிமலை புனித தீர்த்தம் வரவர ஒரு "பிக்னிக்" இடமாக மாறி வருகிறது. இதைத் தடுத்து, அங்கு புனிதத் தன்மையை மீண்டும் நிலைநாட்ட, சித்திவிநாயகர் பெருமான் அழகான புதுக் கோயில் கட்டிக் கொண்டிருக்கிருர்.

தினசரி கீரிமலையில் ஸ்நானம் செய்யும் சிங்களவருள்ளிட்டு சுமார் ஆயிரம் பேருக்கு அப்பிள்ளையார் திருநீறு பூசி சந்தனப் பொட்டிட்டு அருள் செய்கின்ருர்.

நல்ல பக்தரும் தேவார ஆசிரியருமான திரு.செல்லையா சென்ற12வருட காலமாக இக் கோவிலைக் கட்டும் முயற்சியிலேயே தன் வாழ்வைக் கழித்துள்ளார். 12 ஆயிரம் ரூபாய் செலவில் சட்டிய இப் புதுக் கோவில் கும்பாபிஷேகம் அடுத்த வாரம் நடைபெறுகிறது.

* * *

பொதுவாக கிழக்கு மாகாணத்திலும் சிறப்பாக மட்டக்களப்பிலும், சமய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாயும், கோவில் திருவிழாக்களுக்கும், கூட்டுப் பிரார்த்தனை, கதாப்பிரசங்கம் இவற்றுக்கும் பெருங்கூட்டம் கூடுவதாயும், எங்கும் காணுத ஒழுங்கை அங்கு கண்டதாயும், முத்தமிழ்மணி அங்கிருந்து திரும்பியதும் கூறக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். சைவ மங்கையரே இம்மறுமலர்ச்சிக்குக் காரணமாம்.

வடக்கு - கிழக்கு என்ற பேதங்கள் இப்போது பெரிதும் மறைந்து வருவதாயும் அவர் தெரிவித்தார்.

# 175 கடிதங்கள் வாசிக்கப்பட்டன

## இலட்சுமித் தோட்ட விசாரணையில் தோட்டத்துரை தொடர்ந்து சாட்சியம்

நாவலப்பிட்டி, ஆகஸ்ட் 15

இலட்சுமித் தோட்டக் கமிஷன்முன், தோட்டத்துரை திரு. ரோபர்ட் ஹார்லி இன்று மூன்ருவது தினமாகத் தொடர்ந்து சாட்சியமளித்தார். தோட்டத்துரையின் சாட்சியத்தைக் கேட்பதற்காக ஏராளமான தொழிலாளர் கூடியிருந்தார்கள். நேற்றைய தினமும் காங்கிரஸிற்கும் தோட்டத்துரைக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களை வாசித்துக் காண்பிப்பதிலேயே செலவிடப்பட்டது. இலட்சுமித் தோட்ட நிர்வாகிகளுக்காக ஆஜரானவழக்கறிஞர் திரு. டி. எஸ். ஜெயவிக்கிரமாவின் விசாரணை முடியாத காரணத்தால், திரு. ஜி. . பொன்னம்பலத்தின் குறுக்கு விசாரணை நேற்று நடைபெறவில்லை. இரு பகுதியினரும் எழுதிய சுமார் 175 கடிதங்கள் மூன்று தினங்களிலும் வாசிக்கப்பட்டன. திரு. ஹார்லியின் சாட்சியம் இந்தவாரக் கடைசிமட்டும் நீடிக்கலாம் எனத் தெரிகிறது.

திரு. டி. எஸ். ஜெயவிக்கிரமாவின் கேள்விகளுக்குப் பதிலளித்து திரு. ஹார்லி விசாரணைக் கமிஷனின் முன் கூறியதாவது:-

தோட்ட நிர்வாகம், சிறுவர்களை வேலையில் சேர்த்து பெரியவர்களுக்குக்கொடுக்கும் ஊதியத்தை விடக் கொஞ்சம் குறைவாக இவர்களுக்கு கொடுப்பதுண்டு. பெண்கள் 15வயதையும், ஆண்கள் 16 வயதையும் அடைந்ததும் அவர்களைப் பெரியவர்கள் என்றுகருதி தோட்ட நிர்வாகம் முழுச் சம்பளமும் கொடுக்கிறது.

தொடர்ந்து சாட்சியமளிக்கையில் திரு. ஹார்லி தெரிவித்ததாவது:-

மாதர்சங்கக் காரியதரிசி கமலாதேவி சிறுவயதிலேயே தோட்டத்தில் வேலை செய்வதற்காகப் பெயரைப் பதிவு செய்திருந்தார். 1955-ல் கமலாதேவிக்கு 15 வயது நிரம்பியது. இருந்தும் இரண்டுமாதமாக சிறுவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம்தான் வழங்கப்பட்டது. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியமல்ல. ஆனல் தொழில் இலாகா சுட்டிக்காட்டியதும் அது கொடுக்கப்பட்டது.

திரு. ஜெயவிக்கிரமாவின் கேள்விக்குப் பதிலளித்து திரு. ஹார்லி தெரிவித்ததாவது:-

நான் தொழிற்சங்க இயக்கத்துக்கு எதிரியல்ல. நானும் தொழிற்சங்கவாதிதான். தோட்டத்தில் தொழிற்சங்க வேலைகளை நசுக்கும் வேலையில் நான் ஈடுபட்டதோ, அல்லது தொழிற்சங்க இயக்கத்தை நசுக்க எவரையும் ஊக்குவித்ததோ கிடையாது. இனிமேலும் ஊக்குவிக்கமாட்டேன். காவல்காரர்களை ஏவி தோட்டத் தொழிலாளர்களை ஒருபோதும் பயப்படுத்தியது கிடையாது.

காங்கிரஸ், தோட்டத்துரைக்கு எழுதிய கடிதத்தில், இலட்சுமித்தோட்டத்தில்டீமேக்கர், இளம்பெண்கள் சிலரை ஸ்டோருக்கு வரச்சொல்லியதாகவும், இதுபற்றி சில தொழிலாளர் டீமேக்கரிடம் விசாரித்தபோது "அவர்களை வேலைக்கு வரச் சொல்லவில்லை, என்னுடன் தங்கவரச்சொன்னேன்" என்று அவர் நேரடியாகப் பதில் தந்ததாகவும் புகார் செய்யப்பட்டிருந்தது.

இப்படியான சம்பவம் எதுவும் இலட்சுமித் தோட்டத்தில் நடைபெறவில்லை என்று திரு. ஹார்லி மறுத்தார்.

தோட்டத்துரை திரு.ஹார்லி நாவலப்பிட்டிமாவட்டதொழில் அதிகாரிக்குஎழுதியஒரு கடிதம் படித்துக் காட்டப்பட்டபோது, "கிராம மக்கள் வேலையில்லாத நிலையில், ஒழுங்கான முறையில் வேலைசெய்யக் காத்துக் கொண்டிருக்கும்பொழுது, காங்கிரஸின் முட்டாள்தனமான நடவடிக்கையை நான் ஏன் சகித்துக்கொண்டிருக்க வேண்டும்?" என்று குறிப்பிட்டிருந்தார்.

தோட்டத்துரை திரு.ஹார்லி தோட்டத்தில்வேலைசெய்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டது சம்பந்தமான கேள்விகள் விசாரணையின் போது கேட்கப்பட்டபோது தனிப்பட்ட விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிக்க அனுமதிக்கலாமா? என்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சாம். பெர்ஞண்டோ பிரச்சினையைக் கிளப்பினர். இப்படியான செய்திகளைப் பத்திரிகைகளில் பிரசுரிக்காமல்விடவேண்டுமென்று கமிஷன் திரு. கொன்ட்ராட் பெரேரா அங்கிருந்த பத்திரிகை நிருபர்களைக் கேட்டுக் கொண்டார்.

## சைவ நெறியும் வாழ்க்கையும்

மானிப்பாய், புதன்

"சைவ நெறிப்படி வாழ்வதன்மூலம் உலகிலே மிக உயர்ந்த, பண்பாட்டுடன் அமைந்த ஒரு நாகரிக வாழ்க்கையை நாம் வாழமுடியும். இந்த உண்மையை உணராமல் நாம் போலி வாழ்க்கையையே உண்மையென நம்பி வாழ்கிறேம். ஒவ்வொரு ஒழுங்கு முறையும் நமது முன்னேர்களால் சிறந்த அடிப்படைக் கருத்துகளைக் கொண்டே ஏற்படுத்தப்பட்டதாகும்." இவ்வாறு நவாலி முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் பண்டிதர் சோ. இளமுருகனர் "சைவ வாழ்க்கை" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நவாலி இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு முதலியார் வை. மகேசன் தலைமை வகித்தார்.

## சாசனக் கமிஷன் அறிக்கை

### பௌத்த மதத்துக்கே ஆபத்து

குருநாகல், புதன்

குருநாகல்சாசன ரக்ஷா சங்கத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல் செய்யும் யோசனைக்கு எழுபத்தேழு சாசன ரக்ஷா சங்கங்களின் பிரதிநிதிகள் எதிர்ப்புக் காட்டியுள்ளார்கள். குருநாகல் மாவட்ட சாசன ரக்ஷாவின் மூன்ருவது ஆண்டு நிறைவுக் கூட்டம் வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஹேவனபாலா ரத்னசார தேரோவின் தலைமையில் நடைபெற்றபோது எழுபத்தேழு சங்கப் பிரதிநிதிகளும் தமது எதிர்ப்பைக் காட்டினர்கள்.

ரத்னசார தேரோ தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:- இவ்வளவு காலமும் சாசன வேலைகளின் பொறுப்புக்கள் யாவும் பிக்குகளின் கையிலேயே இருந்தன. பிக்குகளல்லாதார் எவரும் இவ்வேலைகளில் ஈடுபடவில்லை. சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல் நடத்த இருப்பவர்களால் பௌத்த மதத்துக்குப் பெரும் தீங்கு ஏற்படலாம். எனவே, பௌத்த சங்கத்திலுள்ள நாம் சாசனக் கமிஷனது அறிக்கைக்கு எமது எதிர்ப்பை எழுதிப் பதிவு செய்யவேண்டும்"

பிரதமரையோ அல்லது அரசாங்கத்தையோ எதற்கும் பிழை கூற முடியாது. நாட்டின் சமாதானத்தை முறுயடிக்க நினைக்கும் சிலரையும் சாசனக் கமிஷனின் அறிக்கைக்கு கைச்சாத்திட்ட சில பிக்குகளையுமே பிழை கூற வேண்டும்.

## ஈழத்து சைவ சித்தாந்த திருப்பணிக் கழகம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக சைவ சித்தாந்தத் திருப்பணிக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. ஆனல் ஈழநாட்டைப் பொறுத்தவரையில், இந்தக் கைங்கரியம் தீவிரமாக நடைபெறுவதற்குரிய சூழ்நிலை இப்போது இல்லை. எனவே ஈழத்துச் சைவசித்தாந்தத் திருப்பணிக் கழகம் தனது செயல் திட்டத்தைப் பின்போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் அடுத்த ஆண்டில் ஏதோ ஒரு குறைந்த அளவிலாகுதல் செயலாற்றக்கூடியஒருசேவைத் திட்டம் வகுக்கவேண்டும்என்ற எண்ணத்தோடு 6-8-61-ல் இக் கழகத்தின் நிர்வாகசபை கூடிப் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. பாடசாலைகளில் திருமுறைப் பிரசாரம் செய்தல், சமயபாடப் பரீட்சைகள் நடத்தல், சமயகுரவர், சந்தானகுரவர் முதலியோரது குருபூசை விழாக்களை விமரிசையாகக் கொண்டாடுதல், ஆலய விழாக்களில் அருள் நெறிப் பிரசாரம் செய்தல்.

2. இந்நாட்டிலுள்ள சைவ சங்கங்கள் யாவற்றையும் ஒருமுகப்படுத்தி ஒன்றுபட்டு இயங்கச்செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுதல்.

3. அருள்நெறித்திருக்கூட்டத்திற்கு அங்கத்தவர்களைச்சேர்த்தல்.

4. கூட்டுப்பிரார்த்தனை, வார வழிபாடு முதலிய ஆராதனை முறைகளைப் பரவச் செய்தல்.

அடிகளார் ஆண்மையில் நிறுவியுள்ள அகில உலக சைவ சித்தாந்த திருப்பணிக் கழகத்தில் ஒரு கிளையாகவே ஈழத்துச் சைவசித்தாந்தத் திருப்பணிக்கழகம் அமைந்து விளங்குகின்றது. கழகத்தின் ஆண்டு விழா அடிகளார் தலைமையில் அவசரகாலச் சட்ட நெருக்கடி தீர்ந்தவுடன் நடக்கவிருக்கின்றதாகையால்கழகத்தோடு இணையவிரும்பும் சங்கங்களும், அருள் நெறித்திருக் கூட்டத்தில் சேர விரும்பும் அன்பர்களும் காலம் தாழ்த்தாது சேர்ந்து கொள்ளுவது நலம்.

"அன்பகம்" கொக்குவில்.

அ. மார்க்கண்டு
இ. கந்தையா
இணைச்செயலாளர்
சைவ சித்தாந்தத் திருப்பணிக்கழகம்

## காரைநகரில் தண்ணீர்க் கஷ்டம்

கடும் வரட்சி காரணமாகக் காரைநகர் எங்கும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிணறு, குளம் குட்டைகளெல்லாவற்றிப் பார்க்குமிடமெல்லாம் வெங்களலாகத் தோன்றுகின்றன. ஆடு, மாடு முதலாம் மிருகங்களோ, பாதைகளிலும் வெளிகளிலும் தவித்துத் திரிகின்றன. இவ்வரட்சி தோப்புக்காடு மக்களையே அதிகம் பாதிக்கின்றது. அவ்வூர்ப்பெண்மணிகள் குடத்தைச் சுமந்து மொண்டுச் சுமார் ஒரு மைல் தூரத்துக்கு அப்பாலுள்ள கிணற்றுக்குச் சென்று நீர் கொண்டு வருவதைப் பார்க்கப் பரிதாபமாகவிருக்கின்றது.

சென்ற வருடங்களில் இத்தகைய வரட்சியின் போது லொறிகள் மூலம் அரசினர் தண்ணீர் விநியோகித்தனர். இந்த வருடம் தண்ணீர்க் கஷ்டம் அதிகரித்திருந்தும் கவனிப்பார் எவருமில்லையே! உள்ளூர் ஆட்சியினரும் மற்றும் அரசாங்க நிர்வாகிகளும் இதனைக் கவனித்து இக்குறையை நீக்குவது அவசியமாகும்.

க. வீரகத்திப்பிள்ளை
காரைநகர்

## ஈழத்துப்பெண்களை மணக்குமாறு மலாயாத் தமிழருக்கு யோசனை

### தாயகம் திரும்பியவருக்கு வரவேற்பு

வட்டுக்கோட்டை, புதன்

"மலாயாவிலுள்ள சகல சமூகத்தினரதும் பெருமதிப்பும் ஆதரவும் திரு. செல்வரத்தினத்துக்கு இருந்து வருவது எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும். இவருடைய உறவினராகிய திரு. எஸ். இராசரத்தினம் மலாயாவில் கலாச்சார, ஒலிபரப்பு மந்திரியாகவும், திரு. ஏ. பொன்னுராசா சட்டசபை அங்கத்தவராகவும் இருந்து நற்பணியாற்றி வருகின்றனர். மலாயாவிலுள்ள தமிழ்பேசும் மக்கள், தமிழ் வளர்ச்சியிலும் கலைவளர்ச்சியிலும் மிகுந்த ஆர்வம் மிக்கவர்கள். அத்துறைகளில் எல்லாம் திரு. செல்வரத்தினம் தமது நண்பர்களின் ஆதரவுடன் சலியாது உழைத்து வருகின்ருர்". இவ்வாறு முன்னைள் கல்வி உதவி அமைச்சர் திரு. கே. கனகரத்தினம் மலாயாவிலிருந்து இலங்கை திரும்பிய வட்டுக்கோட்டை திரு. மு. செல்வரத்தினத்துக்கு அளிக்கப்பெற்ற பாராட்டுவிழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ் வைபவம் பண்ணைகம் மெய்கண்டான் உயர்தரபாடசாலையில் நடைபெற்றது. திரு. கனகரத்தினம் தொடர்ந்து பேசியதாவது: 1875-ம் ஆண்டு தொடக்கம் மலாயாவுடன் தொடர்பு கொண்டுள்ள ஈழத்துத் தமிழர்கள் அந்நாட்டின் விருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்குமாக இன்றும் தான் உழைத்து வருகின்றனர். மலாயா நாட்டுப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் ஈழத் தமிழரின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு பிரஜா உரிமையும், அரசியல் உரிமையும் அளித்துள்ளார். தமிழ் மக்கள் தொடர்ந்து தங்கள் பணியை அங்கு செய்து வர வேண்டுமென்பதே எனது ஆசை".

முத்தமிழ்மணி சி. எஸ். எஸ் மணிஐயர் பேசும்போது திரு. செல்வரத்தினம் சமயத்துறையில ஆற்றிவரும் பணிகளைத் தாம் மலாயாவுக்குச் சென்றபோது நேரில் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்ததெனவும் திரு. செல்வரத்தினத்தின் இலட்சிய வா[illegible]க்கை அனைவருக்கும் ஒரு முன்மாதிரியெனவும் குறிப்பிட்டார்.

திரு. எஸ். வைத்திலிங்கம் ஜே. பி. பேசுகையில் தமிழ் மக்கள் அந்நாட்களில் மலாயா சென்று அந்நாட்டைப்பொன் கொழிக்கும் பூமியாக்கிய வரலாற்றை எடுத்துரைத்தார்.

மலாயா இலங்கையரின் சங்கம் திரு. செல்வரத்தினத்துக்கு அளித்த வரவேற்பு விழாவுக்குச் சங்கத் தலைவர் திரு. நாகரத்தினம் தலைமை வகித்தார். திரு. செல்வரத்தினமும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலரும் மலாயாவில் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்வதை அவர் பெரிதும் பாராட்டினர். மலாயா நாட்டில் பெரிய பதவியில் இருப்பவர்கள் தமது மணப் பெண்களை ஈழநாட்டிலிருந்து அழைத்து தாம்வதிந்து வரும் மலாய நாட்டை மேலும் விரித்தியுறச் செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. செல்வரத்தினத்தின் சமயப் பணிகளைப் பாராட்டு முகமாக திரு கனகரத்தினம் திரு. செல்வரத்தினத்துக்குப் பொன்னடை போர்த்தார்.

## இந்தியா—பாக்....

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

தான சக்திகள் அனைத்தும் ஒன்று திரண்டு இந்த நெருக்கடியைத் தளர்த்த வழிதேட வேண்டும். ஐ. நா. அல்லது பெல்கிரேட் நடுநிலைமை மகாநாடு போன்றவைகள் இவ் விஷயத்தில் தீவிரமாக உதவி செய்ய முன்வர வேண்டும்.

**3ம் திட்டம்**

சென்ற வாரம் புதுடில்லியில் பிரதமரும் திட்டக் கமிஷன் அங்கத்தினர்களும் கைச்சாத்திட்ட 3வது ஐந்தாண்டுத் திட்டம் பல வகையிலும் முககியத்துவம் வாய்ந்தது. திட்டத்தின் மொத்தச் செலவான 11,600 கோடி ரூபாயில் அரசாங்க தரப்பின் செலவு 7,500கோடி ரூபாயாகும். கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற வேலைகள் இந்த ஐந்தாண்டுத்திட்டத்தில் சாதிக்கப்படவேடுண்மென்பது ஏற்பாடு. இத்திட்டத்தின் கீழ் 140லட்சம் பேருக்குப் புதிதாக வேலை தேடித் தரப்படும். தமிழ் நாட்டிலும் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறவிருக்கின்றன. தூத்துக்குடித்துறைமுகம் ஆழமாக்கப்படுதலும், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் ஜெட் விமானங்களுக்கு உபயோகப்படும்படி விஸ்தரிக்கப்படுவதும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. கொச்சித்துறைமுகம் இந்தியாவின் மிகப் பெரும் கப்பல் தளமாக விஸ்தரிக்கப்படும். நாட்டில் 4வது எஃகு ஆலை ஒன்றும் உருவாக்கப்படவிருக்கிறது. மற்றும் பல எண்ணற்ற சுவாரஸ்யமான அம்சங்கள் திட்டத்தில் இருக்கின்றன.

## ஆராய்ச்சி வல்லுனர் டாக்டர் நிக்கலஸ் காலமானர்

கொழும்பு, புதன்

இலங்கைச் சரித்திரத்திலும், புதை பொருள் ஆராய்ச்சியிலும் வல்லுனராய்த் திகழ்ந்த டாக்டர் சி. டபிள்யு. நிக்கலஸ் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானர்.

டாக்டர் நிக்கலஸ் கலால் இலாகாவில் உதவிக் கமிஷனராகவும் அதன் பின்னர் வன பாதுகாப்பு இலாகாவிலும் கடமையாற்றினர்.

## நீர்வேலி கந்தசுவாமி கோயில்

நீர்வேலி, புதன்

நீர்வேலி இந்து சமயவிருத்திச் சங்க ஆதரவில் கந்தசுவாமி கோவிலில் சென்ற 45 தினங்களாக நடைபெற்று வந்த பெரியபுராண படலம் வெள்ளியன்று பூர்த்தியடையும். அன்றைய தினம் விசேட பூசை அன்னதானம் முதலியன நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## அடோலாவுக்கு ஐ. நா. அங்கீகாரம்

நியூயோர்க், ஆக. 16

காங்கோவில் திரு. அடோலாவின் அரசாங்கத்தைச் சட்டபூர்வமான அரசாங்கமாக ஐ. நா. மதிக்கும் என பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் அறிவித்துள்ளார்.

ஜெனிவா, ஆக. 16

லாவோஸில அமெரிக்கத் துருப்புக்கள் இருப்பதாக இன்றைய ஜெனிவா மகாநாட்டில் ரஷ்யாவும், சீனவும் குற்றஞ்சாட்டின. ஆனல் அமெரிக்கா இக்குற்றச்சாட்டை மறுத்தது.

## தோட்டப் பாடசாலை 9ம் ஆண்டு விழா

வத்துகாமம், திங்கள்

சல்கீரியாத் தோட்ட ஏ.பி. பாடசாலைகளின் ஒன்பதாம் வருடாந்த பெற்ருேர் தினவிழா கடந்த சனிக்கிழமை மாலை டிமலைப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு கலாபொச்க குரு பிரதம லிகிதர் திரு. எம். நடராசா தலைமை வகித்தார்.

ஆசிரியர் திரு. வி எஸ். தருமலிங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். பாடசாலை ஆண்டறிக்கையை தலைமை ஆசிரியர் சமர்ப்பித்தார்.

கர்நாடக சங்கீதம், கும்மி, நாட்டுக்கூத்து, நாடகம், நடனம், கரகம் போன்ற கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வத்துகாமம் வட்டார வித்தியாதரிசி திரு. எம்.ஜே. சீமான் பிள்ளை பரிசில்களை வழங்கினர்.

## சகோதரி சுசிதாதேவி

காத்தான்குடி, புதன்

பாரதநாட்டைச் சேர்ந்த காசி சாரதா மடத்தைச்சேர்ந்த சகோதரி சுசிதாதேவி தமது இலங்கை விஜயத்தின்போது கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்துக்கு விஜயம் செய்தார். விபுலானந்த அடிகளாரின் சமாதி, மணிமண்டபம் என்பவற்றைப் பார்வையிட்டபின் மாலைப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டார். கல்லடி உப்போடை மகளிர் மன்றம், மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம் ஆகிய மன்றங்களின் அழைப்பின்பேரில் சென்று கருத்துரை வழங்குவதுடன் பல முக்கிய இடங்களையும் பார்வையிட்டபின் அவர் கொழும்பு திரும்ப இருக்கிருர்.


## 'சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்

வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

## மு. க. ஜெகநாதன்

பூனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்



## கட்டிட சாமான்கள்

கை மார்க் சிமிந்தி

அசானே ,,

டால்மியா ,,

எச் அயண், ஆங்கிலயண்

பிளாட்டயண், ட அயண்

கல்வனைஸ் கூரைத் தகடுகள்

அலுமினியம் ,, ,,

அஸ்பெஸ்டாஸ் ,, ,,

ராணி மார்க் கூரை ஓடுகள்

மஹாராணி மார்க் ,, ,,

இரும்புத் தகடுகள்

கல்வனைஸ் பைப்

மிகவும் சகாயமான விலைகளில் கிடைக்குமிடம்

## செட்டிநாட்

## கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.


## பதுளை நகரசபையின் மாதாந்தக்கூட்ட நடவடிக்கை

பதுளை, செவ.

பதுளை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் நகர மண்டபத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றபோது சபைத் தலைவர் திரு. டபிள்யூ. ஏ. ரத்வத்தை தலைமை வகித்தார்.

அப்போது ஜூன் மாதக்கூட்ட றிக்கை சபையின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டது. திரு. அ. க. முருகேசு பேசுகையில் தமது 135 கேள்விகளுக்கு தலைவர் விடையளிக்கும்போது உண்மைகளை மறைத்துவிட்டதற்கு அவரின் நிர்வாக ஊழல்களே எடுத்துக் காட்டாகுமென்ருர்.

"ஸ்தலஸ்தாபனக் கமிஷனரின் நிர்வாகம் நாளுக்கு நாள் சீர்கேடடைந்து லஞ்ச ஊழல்கள் மலிந்து விட்டது" என்றும் அவர் கூறினர்.

"மின்சாரப் பகுதி சூப்ரண்டனின் வேலை திருப்தியற்றதாகவும் திறமையற்றதாகவும் காணப்படுவதால் அதில் பல ஊழல்கள் மலிந்துவிட்டன. அதனல் அவரினதும் இச்சபையினதும் நன்மையைக் கருதி அவ்வுத்தியோகத்தரை உடனடியாக மாற்றஞ் செய்யவேண்டுமென சபை ஸ்தலஸ்தாபன கமிஷனரைக் கேட்டுக்கொள்ளுகிறது" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## விபத்தினுல் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அராலி வீதியருகில் இருக்கும் கல்லுண்டாய்க் குளத்தில் கிடந்த பிரேதம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர்.

சரவணமுத்து கனகரத்தின் (48 வயது) சடலமென அது அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டது.

இறந்தவரின் சகோதரரான திரு. சரவணமுத்து தம்பிராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது தமையனர் விவாகமாகாதவர். இருதயத்தில் ஏதோ நோய் காரணமாக நெஞ்சில் முட்டு ஏற்பட்டு கடந்த 9 மாத காலமாக அவஸ்தைப்பட்டு வந்திருக்கிருர். அடிக்கடி மயக்கம் அவருக்கு வருவதுண்டு. சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் மயக்கம் ஏற்பட்டிருந்து பின் தெளிவடைந்திருந்தார். சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேலைக்குப் போனேன். இரவு 8 மணிக்கு வீடு திரும்பினேன். அப்பொழுது இறந்தவர் வீட்டில் இல்லை. கறி சமைக்க கத்தரிக்காய், மீன் ஆகியன வெட்டப்பட்டிருந்தன. இரவு அவரைத் தேடிப்பிடிக்கவில்லை. காலையில் தேடிப்பார்த்தோம். குளத்தில் இறந்து கிடப்பதாகத் தகவல் கிடைத்து அங்கு சென்று கண்டேன். எதுவித காயமும் அவருக்கு ஏற்பட்டிருக்கவில்லை. அவரது மரணம் சம்பந்தமாக எவரிலும் நான் சந்தேகம் கொள்ளவில்லை.

ஆனைக்கோட்டைப் பொலிஸைச் சேர்ந்த சார்ஜண்ட் கனகசபை, காசிப்பிள்ளை சின்னத்தம்பி ஆகியோரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன

திடீர்மரண விசாரணை அதிகாரி விபத்தினல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## திருக்கேதீஸ்வரத்தில் ஆடிமகாபூசம்

மன்ஞர், புதன்

ஆடி மகா பூசத் திருநாள் சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது.

இரண்டாயிரத்துக்கு அதிகமானேர் இதிற் பங்குபற்றி நாளைச் சிறப்பித்தனர்.

## இலங்கை வானெலியின் வருமானம் குறையலாம்

### ரிசேவ் வங்கியின் புதிய உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்கள் மட்டுமே ஆங்கிலத்தில் விளம்பரம் செய்ய பணவசதி செய்து தரப்படும் என்ற இந்திய ரிசேவ் வங்கியின் புதிய உத்தரவு இலங்கை வானெலியின் வருமானத்தை பெருமளவு பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது. முன்னெருமுறை விளம்பரங்களுக்கு இந்திய அரசாங்கம் விதித்த கட்டுப்பாட்டினல், 1957ல் ரூ 20 லட்சமாக இருந்த வானெலியின் வருமானம் 1960ல் ரூ 4 லட்சமாகக் குறைந்துள்ளது. இந்த புதிய கட்டுப்பாட்டினல் தமிழ்—இந்தி விளம்பரங்கள் மூலம் ரேடியோ சிலோனுக்கு கிடைத்த வருமானம் தடைபடலாம். இலங்கைப் பிரதம மந்திரி இந்தியப் பிரதமருடன் இது விஷயம் குறித்துப் பேசவேண்டும் என்று ரேடியோ சிலோன் டைரெக்டர் தெரிவித்திருக்கிருர்.

## சிவபிராமண சங்க விசேஷ மகாநாடு

சுன்னகம், புதன்

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் விசேஷ மகாநாடு 14-8-61 திங்கட்கிழமை சுன்னகத்திலுள்ள ஸ்ரீ சதாசிவ பிராசீன வேதாகம பாடசாலை மண்டபத்தில் தலைவர் சிவ ஸ்ரீ சு. துரை சுவாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. போஷகர் அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் சமுகமளித்து சங்கம் செய்த சேவைகளையும் மேலும் கடைப்பிடிக்கும் விஷயங்களையும் வேதாகம பரீட்சை ஒன்று நடத்த வேண்டுமென்பதைப் பற்றியும் பேசினர். துன்னலை, நீர்வேலி கிளைச் சங்கப் பிரதிநிதிகளும் அங்கத்தவர்களும் சமுகமளித்து சங்கம் முன்னேற வேண்டியவைகளைப் பற்றிப் பேசினர். பண்டிதர் ச. பஞ்சாச்சரசர்மா வின்வேதாகமப் பரீட்சைநடத்தவேண்டுமென்ற பிரேரணை சபையின் ஆதரவுடன் அனுமதிக்கப்பட்டது. இது விஷயம் பரீட்சாசமிதி ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைக்கு கொண்டுவரப்படும் எனத் தலைவர் குறிப்பிட்டார். 18-8-61 தொடக்கம் சுன்னகம் பாடசாலையில் உடுவில் சிவ ஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்களால் வகுப்புகள் நடத்தப்படும். மாணவர்கள் எல்லோரும் படிக்க வேண்டுமெனக் காரியதரிசி சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் கேட்டுக்கொண்டார்.

## 'தோட்டபாடசாலைகளை அரசாங்கம் உடனடியாக பொறுப்பேற்க வேண்டும்'

நாவலப்பிட்டி, புதன்

நாட்டின் முதுகெலும்பு தொழிலாளி. தொழிலாளியின் முதுகெலும்பைப் போன்றது அவனது கல்வி. இன்று நமது நாட்டு அரசாங்கம் எத்தனையோ இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கல்விக்காகச் செலவிடுகிறது. அச்செலவின் 60% சதவிகிதம் தோட்டத் தொழிலாளியின் உழைப்பால் ஏற்பட்ட வருமானம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அத்தொழிலாளியின் வருங்காலச் சந்ததிகள் கண்ணிருந்தும் குருடர்களாய் மூளையிருந்தும் முட்டாள்களாய் நடைப்பிணங்களாய் இருப்பதை அறிந்து வருந்துகின்ருேம்." என நாவலப்பிட்டி பரகொல்லை தோட்டக்கமிட்டித் தேர்தல் கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜில்லா பொதுக்காரியதரிசி திரு. டி. ஜி. பிலிக்ஸ் கூறினர்.

பெரும்பாலான தோட்டப் பாடசாலைகள் மாட்டுக்கொட்டில்களைப்போல் இன்றும் காட்சியளிக்கின்றன. தொழிற்சங்கங்கள் தோட்டப் பாடசாலைகளைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு எடுத்து விளக்கியும் அரசாங்கம் இன்றும் பராமுகமாய் இருப்பதேனே! இவ்விதமாக இந்நிலை நீடிக்குமாயின் நாட்டின் நலத்திற்குத் தன்னையே தியாகஞ்செய்யும் தோட்டத் தொழிலாளருக்கு அரசாங்கம் செய்யும் மாபெரும் துரோகம் என்பதில் சந்தேகமில்லை.

நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் தோட்டப் பாடசாலைகளின் கல்வித்தரம் உயரவேண்டும். ஒரு நாட்டிலுள்ள பிரஜைகளில் ஒரு பகுதியினர் முன்னேற்றமும் ஒரு பகுதியினர் பின்னேற்றமும் அடைந்து வருவார்களாயிருந்தால் அந்நாடு எல்லாத்துறைகளிலும் முன்னேறிவிட்டதென்று கூறுவதற்கில்லை. மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகள் இன்றுபோல் கல்வியறிவின்றி இந்நாட்டில் உலாவுவார்களாயின் வருங்காலத்தில் இந்நாட்டின்முன்னேற்றம்மிகமிகப்பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் உடனடியாகப் பொறுப்பேற்று தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளை இந்நாட்டின் வருங்கால நல்ல பிரஜைகளாக்க அரசாங்கம் முன்வருதல் வேண்டும். இதுவே இந்நாட்டிற்காகத் தன்னையே தியாகஞ் செய்யும் தோட்டத் தொழிலாளருக்கு அரசாங்கம் செய்யும் கடமைகளில் முக்கியமானதாகும்" எனவும் அவர் கூறினர்.

## 'குடிசைக்கைத்தொழில் விருத்தியுற வேண்டும்'

அத்தனகலை, செவ்வாய்

"தேசிய குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் கிராம மக்களுக்கு, அரசாங்கம் எப்போதும் உதவி செய்யக் காத்திருக்கிறது" என்று பெல்பிற்ற கிராமஅபிவிருத்திசங்கத்தினல் நிறுவப்பெற்ற தும்புத் தொழிற்சாலையொன்றைத் திறந்து வைத்த சுகாதார உதவி மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா தமது தலைமையுரையின் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:- "இப்பகுதியைச் சேர்ந்த பல கிராம மக்கள் குடிசைக் கைத்தொழில்களில் அதிக அக்கறை செலுத்துவதைக் கண்டு நான் உண்மையாகவே மகிழ்ச்சியடைகின்றேன். கிராம மக்கள், தங்களது குடிசைக் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களான தும்புத்தடி, பாய் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யலாம். கிராம மக்கள், குடிசைக் கைத்தொழில்களில் அதிக கவனமெடுத்து, தேசிய கைத்தொழில்களை விருத்தி செய்ய முன்வரவேண்டும். இது அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த உதவுகின்றது.

## லைசன்ஸ் பெருதவர்த்தகர்களுக்கு அபராதம் ரூ. 5000

கொழும்பு, செவ்வாய் வர்த்தகர்களுக்கு லைசன்ஸ் வழங்கும் திட்டம் நடைபாதை வர்த்தகர்களைப் பாதிக்காது என அறிவிக்கப்பட்டுஇளது.

இந்த லைசன்ஸ் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்களை இம்மாதம் 21-ம்திகதிக்கு முன்னர் லைசன்ஸ் அதிகாரியிடம் சமர்ப்பிக்கவேண்டுமென வர்த்தகர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வர்த்தக ஸ்தாபனத்திலும் இந்த லைசன்ஸ் தொங்கவிடப்படவேண்டுமென்றும், இவ்வித லைசன்ஸ்பெருது வியாபாரம் செய்பவாகள் 5000 ரூபாவுக்கு அதிகமாகாத அபராதம் செலுத்தவேண்டியிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லைடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றது

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லைடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களேயும், கால்மேஸ்களேயும் மிஞ்சியது "லைடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்.

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.


# கிலாவத்தை தோட்ட ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய உற்சவம்

## தோட்டத்தொழிலாளர்கட்கு வித்தியாதரிசியின் அறிவுரை

நாவலப்பிட்டி, புதன் கிலாவத்தைத் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் தோட்ட அதிபர் திரு. சி. டி. கீத் தலைமையில் அதிவிமரிசையாக நடைபெற்றது. அதில் சொற்பொழிவாளர்களாக உதவி அதிபர் திரு. பி. குமாரசாமியும் பிரதம பேச்சாளராக கண்டி மாவட்ட வித்தியாதரிசகர் திரு. பி. சின்னத்துரையும் கலந்து கொண்டனர். வித்தியாதரிசகர் தமது உரையில் கூறியதாவது:

"உலகிலே உள்ள பொருளாதார, சமூக, சமய, அரசியல் பிரச்சினைகள் அனைத்தையும் இறை வழிபாட்டினால் தீர்க்க முடியும். மக்களை மக்களாக மதிப்பது சமயம் ஒன்றுதான். சமய அடிப்படையில் வாழ்ந்தால், வஞ்சகம், பொருமை, சுயநலம், போட்டி மனப்பான்மை ஆகிய அசுரத் தன்மைகளிலிருந்து மக்கள் விலகி, அன்பும், அருளும், அறனும் கொண்ட வாழ்வை எய்தலாம். அன்பும் அறனும் கொண்ட வாழ்வில் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்து வாழ முடியும். தோட்ட மக்கள் அங்ஙனம் வாழ முயற்சித்தால் அவர்களது முகாமைக்காரரது நன்மதிப்பைப் பெற்றுத் தமது அடிப்படையின் உரிமைகளைப் பெற அன்பு மார்க்கமே சுலபமான வழியாகும். பலாத்காரப் பாதையைக் கடைப்பிடித்தால் துன்பமேயன்றிச் சுபிட்சம் ஏற்படாது."


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்" டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.



தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 17-8-61**

காலை 6-45 உதயகீதம், 7-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 பான்ட் வாத்தியஆசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-45 'வாடியமலர்' - நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-10 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை, 10-00 உமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள் 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. சரோஜினி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 டி. சரோஜினி - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 ராகம், தானம் பல்லவி-மைலம் பி. வஜ்ரவேலு முதலியார் - பாட்டு, 8-40 திரைப்படஇசை, 9-45 சுபத்தசங்கீதம், 9-30 அகில பாரதசித்திரம்.

## இலங்கை கடற்படை பற்றி ஆராய விசாரணைக் கமிஷன்

கொழும்பு, செவ்வாய் கடந்த 4 வருடங்களாக இலங்கைக் கடற்படையின் வேலை முறைகள் பற்றி ஆராய ஒரு விசாரணைக் கமிஷனை நியமிப்பதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. கடந்த சில காலத்தில் சங்கச் சட்டங்கள் எவ்வாறு மீறப்பட்டிருக்கிறதென இக் கமிஷன் பரிசிலனை செய்யும். இலங்கைக் கடற்படையை புனருத்தாரணம் செய்வது சம்பந்தமாயும் கமிஷன் ஆலோசனை கூறும்.

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

**தாமோதர விலாஸ்**

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.



**மகத்தான 5-வது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30க்கும்
இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

**ஜெமினி கணேசன், பத்மினி**
**கே. ஏ. தங்கவேலு, மனோரமா**
**எஸ். நடராஜன்**
மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

**மீண்ட சொர்கம்**

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30,
இரவு 9-30 மணிக்கும்

**சிவாஜி கணேசன் - பத்மினி**
நடித்த
**சம்பூரண**
**ராமாயணம்**

தினசரி மாலை 4 மணிக்கும், சனி காலை 10 மணிக்கும்
**ஹோர்ஸ் சோல்டேர்ஸ்**
(ஆங்கிலம்)
**HORSE SOLDIERS**


# சீனாவுடன் பாகிஸ்தானுக்கு எல்லைப் பிரச்சினை ஏது?

## ஏதாவது நடந்தால் ஐ. நா.வுக்கு எடுத்துச் செல்வோம் —நேரு

புதுடில்லி, ஆக. 16

"எல்லைப் பிரச்னைபற்றி பாகிஸ்தான் சீனாவுடன் பேச்சு நடத்தவிருப்பதாகக் கூறுவது முறையற்ற செயல்" என பிரதமர் நேரு இன்று வெளிவிவகாரக் கொள்கை பற்றிய விவாதத்தில் குறிப்பிட்டார்.

சீனாவுடன் பாகிஸ்தானுக்குள்ள எல்லைத் தகராறு எதுவுமே கிடையாது. சீனாவுடன் எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதுபற்றிப் பேசத் தயாராய் இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்திருப்பது ஜம்மு-காஷ்மீரை மனதில்கொண்டேயாகும். பாகிஸ்தான் நினைப்பது போல் அது எல்லையை நிர்ணயிக்க முடியாது. இந்தப் பகுதி இந்தியாவைச் சேர்ந்தது. இவ் விஷயமாகப் பேச்சுவார்த்தைகள் ஏதாவது நடைபெற்றால் பாரதம் ஐ. நா. சபைக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லும்" என்றும் நேருஜி குறிப்பிட்டார்.

## புதிய வரிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைச்சீனி விலைஉயர்வை ஒத்துக்கொள்ள முடியாது. இது தேவையற்ற ஒரு வரி. இன்று இந்த வரியை வாபஸ் பெற அரசாங்கம் தயாராக வில்லை. சீனி-மாவு விலையேற்றம் நகரத்திலுள்ள தொழிலாளரையும், கிராமவாசிகளையும் பாதிக்கிறது. சீனி, மாவு விலையை அதிகரிக்காமலும், தேசிய அபிவிருத்தி வரியை விதிக்காமலும் நிதி அமைச்சர் வேறு வழியில் பணத்தைப் பெற்றிருக்கலாம். நடுத்தர வர்க்கத்தினரும், குறைவான வருமானம் பெறுபவர்களும் நாட்டின் அபிவிருத்திக்காக தியாகம் செய்யவேண்டுமென்ற கொள்கையை நான் எதிர்க்கவில்லை.

"தியாகம் செய்யச்சொல்லி பொதுஜனங்களைக் கேட்பதற்கு முன்பு, வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்கப்பார்க்க வேண்டும். முதலில் வெளிநாட்டு முதலீடுகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். சோஷலிஸ அமைப்புக்கு தேவையான கிராமவாசிகளையும், நகரமக்களையும் பிரித்து வைக்கவேண்டாம்.

தொடர்ந்து திரு. கெனமன் கார்ப்பரேஷன்கள் பற்றிப் பேசியபோது தெரிவித்ததாவது:

21 அரசாங்க கார்ப்பரேஷன்களில் 6 கார்ப்பரேஷன்கள் தான் நயம் காட்டியிருக்கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி வரவு செலவுத்திட்டத்துக்கு சாதகமாக வாக்களிக்கும். ஆனால் அரசாங்கத்தின் புதிய வரிகளுக்குத் திருத்தம் கொண்டுவரும். கம்யூனிஸ்ட்கட்சி இது ஒரு சோஷலிஸ அரசாங்கம் என்று ஒருபோதும் நம்பவில்லை. இது ஒரு தேசிய முதலாளித்துவ அரசாங்கம் என்ற அடிப்படையில் தற்போதைய வரவுசெலவுத் திட்டத்தைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. தியாகங்கள் செய்யும்படி பிரதமரும், நிதி அமைச்சரும் கோருவது போதாது.

### தேவை

காஷியர், மெஷின் மெக்கானிக்ஸ் உடன் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். நவஜீவன், 45, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்.

## ஆழ்வாப்பிள்ளைக்கு பதில் ராஜேந்திரா

கொழும்பு, புதன்

போக்குவரத்து மராமத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, திரு. எம். ராஜேந்திரா இளைப்பாறிச் செல்லவிருக்கும் திரு. கே. ஆழ்வாப்பிள்ளையின் ஸ்தானத்தில உணவு, வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது.

அப்படியானல் திரு. ராஜேந்திராவுக்குப் பதில் மராமத்து இலாகா டைரக்டர் திரு. எச். ஆர். பிரேமதாஸா நியமிக்கப்படலாம்.

## மீட்கப்படாத பொருள்கள் ஏலத்தில் விற்கப்படும்

மாவிட்டபுரம், வியாழன்

கீரிமலையில் யாத்திரீகர்களால் தவற விடப்பட்ட பொருள்கள் விரைவில் மீட்கப்படாவிடில் அப்பொருளகள் யாவும் தெல்லிப்பளைக் கிராமச் சங்கத்தினல் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுமெனத் தெரிகிறது.

## பிள்ளையார் கோவில் வருட மகோற்சவம்

மாவிட்டபுரம், வியாழன்

தையிட்டி கணைய பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகியது. பத்து தினங்கள் உற்சவங்கள் தொடர்ந்து நடைபெறும்.

## 'கருப்பட்டித்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும்'

கரவெட்டி, புதன்

"கருப்பட்டித்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் அதற்காக எமது ஸ்தாபனம் அயராது பாடுபடவேண்டும். கருப்பட்டிக் குடிசைக் கைத்தொழிலுக்கு ஆவன செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு" என்று சமீபத்தில் துன்னலை தெற்கு தயாநிதி சனசமூக நிலைய மைதானத்தில் நடந்த கூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசிய திரு. எம். சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கீழ்க்காணும் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சாதி ஒழிப்பு மசோதாவை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர அரசாங்கத்துடன் பேசி ஆவன செய்யும்படி உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரத்தைக் கேட்டுக்கொள்வது.

திருவாளர்கள் கே. டானியல், ஈ. வி. செல்வரெட்ணம், கே. பசுபதி ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

## வரவு செலவுத் திட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்னதம்பதிகளும் பிரசன்னமாகவில்லை.

டாக்டர் என். எம். பெரேராவுக்கு 102 டிகிரி ஜுரமாக இருப்பதால் வர முடியவில்லை என்று டாக்டர்கொல்வின்தெரிவித்தார்.

நிதிமந்திரி விவாதத்துக்கு அளித்த பதிலின் போது, நிதி நிலைமை திருந்தினல் பிறகு மாவு,சீனி விலைகளைக் குறைக்கலாமென்ருர். வாக்கெடுக்கையில்சபையில் ஒரே ஆரவாரமாக இருந்தது.

# பின்தங்கிய சமூகங்களும் குடியேற்றத் திட்டமும்

மாவிட்டபுரம், புதன்

"கண்டிப்பகுதியிலுள்ள பின்தங்கிய சமூகங்களின் நலனைப் பேண நியமிக்கப்பட்ட சபையினர் கூறியவாறு கிராமங்கள் தோறும் குடியேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுவது போல் இப்பகுதியிலுள்ள பின்தங்கிய சமூகங்களுக்கும் ஒரு குடியேற்றத்திட்டத்தை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் சார்பில் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு தெல்லிப்பளைக் கலட்டி பொன். கந்தையா மாணவர்மன்ற வருடாந்த விளையாட்டுப்போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெல்லிப்பளைக் கிராமச் சங்கத் தலைவர் திரு. கு. கதிரையாண்டி மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கலட்டி வாசிகளுக்கும் கூவில் வாசிகளுக்கும் விரைவில் குடியேற்ற வசதி செய்து கொடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

திரு. ப. ஆறுமும் (இலங்கை அரசாங்க புகையிரத ஊழியர்) அவரது மனைவி ரேவதி (யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரி,தாதி) ஏனையோரின் 4வயது குழந்தை இந்திராணி 16-8-61 பி. ப. 3 மணியளவில் காலமானர் அன்னரின் ஈமக்கிரியை கந்தரோடை யங்கம் பிலவு மயானத்தில் 17-8-61 பி. ப. 4 மணியளவில் நடைபெறும்.

## என்னைக் கைது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைக்கப் போவதாக அறியவருகிறேன். யாராவது மக்கள் ஆட்சேபித்தால் அவர்கள் சுட்டுக்கொல்லப்படலாம்.

நான் ஒரு மெம்பரை சுட்டுக் கொல்வதற்காக "சிராவஸ்திக்கு" துப்பாக்கியுடன் சென்றதாக ரகசிய பொலிசுக்குக் கூறும்படி, ஒரு பார்லிமென்ட் மெம்பர் கேட்கப்பட்டிருக்கிருர். ரகசிய பொலிசார் அங்கு வந்தபோது மற்றும் இரு மெம்பர்கள் டி. அல்விஸும், லக்ஷ்மன் ராஜபக்சாவும், அங்கிருந்தனர். நான் ஒரு துப்பாக்கியைக் கொண்டுவந்தேனை என்று அவ்விருவரையும் பொலிசார் கேட்டனர். என்னைக் கைது செய்ய ஒரு மந்திரி வாரண்டைத் தயாராக வைத்திருப்பதாயும் நான் கேள்விப்பட்டேன்."

தலைவர்:- இது பொலிஸ் பற்றிய விஷயம். என் அறையில் தனியாக வந்து தாங்கள் பேச வேண்டுகிறேன்.

டாக்டர் டி. ஸில்வா:- அதனல் தான் இவ்விஷயத்தை இச்சபையில் கொண்டு வந்து இதுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்கின்றேன். நான் கைது செய்யப்பட விரும்பவில்லை. அவ்விதம் கைது செய்யப்பட்டால், நான் பட்ஜட் மீது வாக்களிக்க முடியாது போகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.